பக்கங்கள் 28

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 16 ஞாயிற்றுக்கிழமை 02.11.2025 | அதிர்வு 95

## களனி கங்கையில் மூழ்கி யுவதி ஒருவர் உயிரிழப்பு!

களனி கங்கையில் மூழ்கி பொகவந்த லாவை யுவதி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

03




# செம்மணியை மீண்டும் புதைக்க இடமளியாதீர்!

## நீதி கோரி யாழில் போராட்டம் சிங்களவர்களும் பங்கேற்பு

(எஸ்.நிதர்ஷன்)

செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி வேண்டி நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் நகர் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில், ‘செம்மணி மனிதப் புதைகுழியை மீண்டும் மூடி மறைப்பதை நிறுத்து! உண்மையை வெளிப்படுத்து!!’ எனும் தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், ‘மேலும் அடக்குமுறைச் சட்டங்கள் வேண்டாம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை 03



# வாய்ப் பேச்சு வேண்டாம்; செய்து காட்ட வேண்டும்!

## அரசிடம் மனோ எம்.பி. வலியுறுத்து



மலையக மக்களுக்கான முகவரி என்பது அஞ்சல் சார்ந்தது மாத்திரம் அல்ல அது அரசியல் ரீதியானது என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

மலையக மக்கள் தேசிய நீரோட்டத்தில் இருந்து ஒதுக்கப்பட்ட மக்களாக உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தனியார் வானொலி ஒன்றின் நேர்காணலிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஒரு சில காத்திரமான உண்மைகளுடன் மலையக மக்கள் அஞ்சல் விடயங்களில் எதிர்நோக்கும் சவால்களை அவர் எடுத்துரைத்தார். .

ஐக்கிய மக்கள் சக்தியின் 03




மண்டைதீவில் நூற்றுமுப்பது ஏக்கரில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்டன. இப்போது அது ஆரம்பக்கட்டத்திலேயே தற்போதைக்கு ஐம்பது ஏக்கரில் நிறுவுவது எனச் சுருங்கி விட்டதாகத் தெரிகின்றது.

யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்டன. அதே வேகத்தில் அடிக்கல் நடும் நிகழ்வும் இடம் பெற்றது. ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவே நேரில் வந்து அடிக்கல் நட்டார். அப்போதே இது அரசியல் நோக்கத்திற்காக அவசர கோலத்தில் முன்னெடுக்கப்படும் 03

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# கார் மோதி பாதசாரி பரிதாப உயிரிழப்பு!

வீதி விபத்தில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் இரவு அனுராதபுரம் – குருநாகல் வீதியில் அலுத்வெவ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

அனுராதபுரம் நோக்கிப் பயணித்த கார் ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

காரின் சாரதி காயமடைந்த நிலையில் அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் அனுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் ஹெரோயினுடன் கைது!

நாட்டில் வெவ்வேறு பிரதேசங்களில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் 13 கிராம் ஹெராயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மொரட்டுவை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

மொரட்டுவை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் அம்பாறையில் தமன பொலிஸ் பிரிவின் ஹிங்குரான பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின் போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஜுலை மாதம் 11 ஆம் திகதி ஹிரண பிரதேசத்தில் ஒருவரைச் சுட்டுக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பிலும், பாணந்துறை பொலிஸ் பிரிவில் மற்றொரு நபரைச் சுட்டுக் கொல்லத் திட்டமிட்ட சம்பவம் தொடர்பிலும் மேற்படி சந்தேகநபர் தேடப்பட்டு வந்தார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 13 கிராம் எடையுள்ள ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் ஹிங்குரான பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடையவர் ஆவார்.

இந்த விடயம் தொடர்பில் தமன மற்றும் ஹிரண பொலிஸ் நிலையங்கள் மற்றும் பாணந்துறை பிரதேச குற்றப் புலனாய்வுப் பணியகம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

வட மாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை-2025
“நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்.” - வாரன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

நடவடிக்கை என்று விமரிசிக்கப்பட்டது.

அரசியல் நோக்கங்கள் புதைந்து கிடப்பதால் அடிக்கல் நட்டதுமே – அந்த வேகத்திலேயே – பூர்வாங்க வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்களும் கோரப்பட்டு வேலைகளும் தொடங்கி விட்டன என்பதை இரண்டு வாரங்களுக்கு முன்னர் சுட்டிக் காட்டியிருந்தேன்.

இத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்க முன்னர் செய்யப்பட வேண்டிய சட்ட ரீதியான அடிப்படை ஏற்பாடுகள் – முன்னாயத்தங்கள் – மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்து அந்த நடவடிக்கைகளை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் (Wildlife & Nature Protection Society - WNPS) கண்டித்திருக்கின்றது என்பதையும் –

தேவையான சுற்றுச்சூழல் மதிப்பீடுகளை முடிக்காமல் அடிக்கல் நடப்பட்டமை இலங்கையின் சுற்றுச்சூழல் சட்டங்களைத் தெளிவாக மீறுவதாகும் எனக் குறிப்பிட்டு, இது தொடர்பான சட்ட விதிகள், பிரிவுகள், ஏற்படக் கூடிய பாதிப்புகள், தாக்கங்கள் பற்றி எல்லாம் கோடி காட்டி, அந்த அமைப்பு அரசுக்கு ஓர் அறிக்கை சமர்ப்பித்துள்ளது என்பதையும் – ஏற்கனவே இப்பத்தியில் தெரிவித்திருந்தேன்.

இத்தகைய சிக்கல் நிலையில் சர்வதேச கிரிக்கெட் மைதான அமைப்பு வேலைகளைக் கண்மூடித்தனமாகத் தொடர்ந்தால், நீதிமன்றத் தடை உத்தரவுகள் இலகுவாக வர வாய்ப்புகள் உள்ளன என்பதை நிர்வாக மட்டங்கள் ஊகித்துக் கொண்டமையினால் அவை சுதாகரித்துக் கொண்டன.

அந்தப் பின்புலத்தில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் தொடர்பில் பல திணைக்களங்களத்தின் உயர்நிலை அதிகாரிகளும் கூட்டிணைந்து மைதானம் அமையவுள்ள மண்டைதீவுக்கு, நேற்று முடிவுற்ற வாரத்தில் ஒரு கள ஆய்வை மேற்கொண்டனர்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு பிரிவு, வனவள பாதுகாப்பு பிரிவு, மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் ஆகியவற்றுடன் கடற்றொழில் திணைக்களம், கடலோர பாதுகாப்புத் துறை, மாகாண விளையாட்டு அமைச்சகம் எனபனவற்றின் மூத்த அதிகாரிகள் இதில் பங்குகொண்டனர்.

இந்தக் கள விஜயத்தின்போதே இப்போதைக்கு அண்ணளவாக ஐம்பது ஏக்கரில் மட்டும் கிரிக்கெட் மைதானத்தை நிறுவுவதற்கான வேலைகளை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிய வந்தது. அதற்கும், சில விடயங்களில் வனவளத் திணைக்களம் உள்ளிட்ட தரப்புகளுக்கு இருக்கும் பிரச்சினைகளை தீர்த்த பின்னர் பணியைத் தொடர்வதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டு, நிர்மாணப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு, வேலைகளுக்கான கூறுவிலையும் கேள்விப்பத்திர விளம்பரங்கள் மூலம் கோரப்பட்ட பின்பு, தற்போதுதான் சுற்றுச்சூழல் பரிசோதனை (IEE) மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை (EIA) என்பவற்றைப் பெறுவதற்கு ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

நல்ல நிர்வாகம்தான் போங்கள்.....!

* * *

ஊழல், மோசடி, முறைகேடுகள் கையாள்வதில் தற்போதைய அரசாங்கம் திறம்படச் செயல்படும் என்று இலங்கை மக்களில் 38.7 சதவீதம் பேர் மட்டுமே நம்புகின்றனர் என ஒரு புள்ளி விவர ஆய்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

சமூக ஒற்றுமை மற்றும் அமைதியை வலுப்படுத்துதல் சம்பந்தமாக நல்லிணக்கம், பொறுப்புணர்வுள்ள நிர்வாகம் ஆகியவை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜெர்மன் வெளியுறவு அலுவலகம் ஆகியவைஇணைந்து நிதியளிக்கும் திட்டத்தின் கீழ் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது.

மேலும், முந்தைய அரசாங்கங்கள் ஊழலைக் கையாள்வதில் திறம்பட செயல்பட்டன என்று ஆக 12.5 சதவீதம் பேர் மட்டுமே நம்புகின்றனர் என அந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

இனக் குழுக்களுக்கு இடையேயான ஒற்றுமை மற்றும் நேர்மறையான உறவுகள்தான் நல்லிணக்கம் என்று அதன் அர்த்தத்தை 48.5 சதவீதம் பேர் சரியாகப் புரிந்துகொள்கிறார்கள் என்பதையும், இது, நல்லிணக்கத்தைப் பற்றிய உறவு அடிப்படையிலான புரிதல் அதிகரித்து வருகிறது என்பதையும் காட்டுவதாக கணக்கெடுப்பின் பேறுபேறுகள் சுட்டுவது நல்ல அம்சம்தான்.

## களனி கங்கையில்...

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வெல்லம்பிட்டி பகுதியில் உள்ள தேயிலைத் தொழிற்சாலையொன்றில் பணிபுரிந்து வந்த மூன்று யுவதிகளும் இரண்டு இளைஞர்களும் நேற்று மதியம் கொஹிலவத்த பகுதியில் களனி ஆற்றங்கரைக்கு ஓட்டோவில் சென்றனர்.

ஓட்டோவின் உரிமையாளரான இளைஞர் ஒருவர் களனி ஆற்றங்கரையில் ஓட்டோவை நிறுத்திச் சுத்தம் செய்தார்.

அந்த நேரத்தில், மேற்படி யுவதிகளில் ஒருவரான அந்த இளைஞரின் காதலியும் தண்ணீரில் இறங்க முயன்ற போது, இருவரும் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டனர்.

நீரில் மூழ்கிய இளைஞர் கரைக்குத் திரும்பிய போதிலும், அவரது காதலி காணாமல்போயிருந்தார்.

பின்னர் அவர், பொலிஸ் மற்றும் கடற்படை சுழியோடல் பிரிவின் அதிகாரிகளால் சடலமாக மீட்கப்பட்டார்.

உயிரிழந்த யுவதி பொகவந்தலாவையைச் சேர்ந்த 21 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளர்.

## வாய்ப் பேச்சு...

தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் நெடுஞ்சாலைகளில் இருந்து ஒரு கிலோமீற்றருக்குள் மக்களுக்கு காணி வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மனோ கணேசன் தெரிவித்தார்.

மீண்டும் மீண்டும் மலைப் பாங்கான உயரமான பகுதிகளில் காணிகளை வழங்கினால் அஞ்சல்காரர் கூட அவர்களை அணுக முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசைச் சேர்ந்த மலையக மக்கள் பிரதிநிதிகள் பேச்சளவில் மாத்திரம் இருக்காமல் அதனைச் செயற்படுத்துமாறும் அவர் வலியுறுத்தினார்.

## செம்மணியை...

இரத்துச் செய், அனைத்து தேசிய இனங்களுக்கும் சம உரிமையை உறுதி செய், செம்மணியை மீண்டும் புதைக்க இடம் கொடுக்காதே...! உண்மையை வெளிப்படுத்து!!, அனைத்து காணாமல் ஆக்கல்களுக்கும் இப்போதாவது நீதி வழங்கு' ஆகிய வசனங்கள் அடங்கிய பதைதைகளை ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் சிங்கள மக்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.








# வீட்டுக்குள் அத்துமீறி வெறியாட்டம்! கூரிய ஆயுதங்களுடன் ஐவர் கைது!!

வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து உரிமையாளர்களைத் தாக்கிய கும்பல் கூரிய ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளது.

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விகாரை வீதியில் அமைந்துள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து வீட்டு உரிமையாளர்களை அச்சுறுத்திப் பலமாகத் தாக்கிக் காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய 5 சந்தேகநபர்கள் களுத்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் களுத்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில் களுத்துறை பிரதேசத்தில் வைத்து இரண்டு சந்தேகநபர்கள் முதலில் கைது செய்யப்பட்ட நிலையில் அவர்களிடமிருந்து கிடைத்த தகவலுக்கமைய ஏனைய மூன்று சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் பல பிரதேசங்களில் நபர்களைத் தாக்குதல், அச்சுறுத்துதல் மற்றும் வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்து பொருட்களை உடைத்து சேதப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து 5 கூரிய ஆயுதங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் களுத்துறைப் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.



# கத்தியால் குத்தப்பட்டு இளைஞர் படுகொலை!

கத்தியால் குத்தப்பட்டு இளைஞர் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கேகாலை – புலத்கொஹுபிட்டிய பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

கேகாலை, எந்துராபொல பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞர் தனது வீட்டினுள் உள்ள ஒலிப்பேழையை அதிக சத்தத்துடன் இயக்கியுள்ளார். இதன்போது அயல் வீட்டில் வசிக்கும் நபர் ஒருவர், ஒலிப்பேழையின் சத்தத்தைக் குறைக்குமாறு இளைஞரிடம் வாக்குவாதம் செய்துள்ளார்.

இருவருக்கும் இடையிலான வாக்குவாதம் எல்லை மீறியதால் அயல் வீட்டில் வசிக்கும் நபர், இளைஞரைக் கத்தியால் குத்திப் படுகொலை செய்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் 76 வயதுடைய அயல் வீட்டில் வசிக்கும் நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புலத்கொஹுபிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# நாட்டில் அபிவிருத்தி ஏற்படுவதற்குப் பதிலாக பாதாள உலக கலாசாரமே உருவாகி வருகிறது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு

மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறும்போது, அவர்கள் மீண்டும் வீடு திரும்புவார்களா? இல்லையா? என்பதில் நம்பிக்கையில்லா நிலை காணப்படுகின்றதாக எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன், இன்று நாட்டில் அபிவிருத்தி ஏற்படுவதற்குப் பதிலாக, நாட்டில் பாதாள உலகக் கலாசாரமே உருவாகி வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

மாளிகாவத்தை மற்றும் கெத்தாராம வட்டாரங்களில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அபிவிருத்தியால் மிளிரச் செய்வோம் என்று அளித்த வாக்குறுதிகள் இன்று நிறைவேற்றப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இன்று துப்பாக்கிச் சூடு நடத்தப்படுமா அல்லது கொலை நடக்குமா என்பது குறித்து நிச்சயமற்ற தன்மை நிலவுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டு மக்கள் இன்று சமூகப் பாதுகாப்பைக்கூட இழந்துவிட்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் திறமையின்மையால், சட்டம் ஒழுங்கு குண்டர்கள் மற்றும் பாதாள உலகக் குழுக்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் முழு நாட்டிலும் அச்சமும் சந்தேகமும் நிலவுகின்றதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.













நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ரணிலும் சஜித்தும்

இன்று எதிர்க்கட்சிகளின் வரிசையில் மூத்த தலைவர்கள் என்று குறிப்பிடுவதானால் ஒருவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க. மற்றவர் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ.

இருவரும் ஒரு கட்சியில் இருந்துதான் - ஐக்கிய தேசியக்கட்சியில் இருந்துதான் - நீண்ட காலம் அரசியல் செய்து மேல் நிலைக்கு வந்தவர்கள்.

ஒருவர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் மருகரும், அவரது வாரிசுமான ரணில். மற்றவர் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மகனும் அவரது வாரிசுமான சஜித்.

ஐக்கிய தேசியக் கட்சியில் ஜே.ஆருக்கும் ரணசிங்க பிரேமதாஸவுக்கும் இடையில் முரண்பாடுகள் இருந்த போதிலும் தத்தமது காலகட்டங்கள் வருவதற்காக இருவரும் முரண்படாமல் காத்திருந்தவர்கள்.

சுதந்திர இலங்கையின் முதலாவது அமைச்சரவையில் - 1948 ஆம் ஆண்டில் - நிதியமைச்சராக இருந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. ஆயினும் நாட்டினுடைய தலைவராக வருவதற்காக அதற்குப் பின்னரும் - 29 ஆண்டுகள் - கட்சிக்குள் காத்திருந்தவர் அவர்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுடன் முரண்பட்டிருந்த போதிலும் அவருடைய ஆட்சிக் காலம் முடிவடைந்து, அதன் பின்னர் கட்சித் தலைமையை ஏற்பதற்காக - பிணக்கிலும் இணக்கம் கண்டு - கட்சியோடு பயணித்தவர் ரணசிங்க பிரேமதாஸ.

ஆனால் அவர்கள் இருவரினதும் வாரிசுகளான ரணிலாலும் சஜித்தாலும் கட்சிக்குள் நீண்ட காலம் இணக்கமாகத் தாக்கு பிடிக்க முடியவில்லை. கட்சியின் தலைவராக ரணில் முப்பது ஆண்டுகளுக்கு மேல் தொடர்கின்றார்.

இந்த நிலைமை நீடித்தால் தமக்குக் கட்சித் தலைமை வருவதற்கு வாய்ப்பே இல்லை என்று கருதி, ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்துக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினார் சஜித். அதன் மூலம் கட்சித் தலைவர் ரணிலை அவரால் பலவீனப்படுத்த முடிந்தது. ஆயினும் தாம் உருவாக்கிய புதிய கட்சியின் மூலம் அதிகாரத்தை அவரால் கைப்பற்றவே முடியவில்லை. அதிகாரம் கண்ணுக்கெட்டிய தூரத்தில் அவரது கைக்கு வருவதற்கான சாத்தியங்களும் தென்படவில்லை. இரண்டு ஜனாதிபதி தேர்தல்களில் தோல்வி கண்டு, தேர்தல் தோல்வி விடயத்தில் தாமும் ரணிலுக்கு சளைத்தவர் அல்லர் என்ற நிலைமையைத்தான் சஜித்தும் உருவாக்கி நிற்கின்றார்.

ஆனால் ரணிலுக்கும் சஜித்துக்கும் இடையில் வேறொரு விடயத்தில் வேறுபாடு உண்டு.

சந்திரிக்காவிடமும் பின்னர் மஹிந்தவிடமும் ஜனாதிபதி தேர்தலில் தோற்ற பின்னர் - அப்போதைய சுதந்திரக் கட்சி வலிமை பெற்று நிற்கையில் - அதை வீழ்த்துவதற்காக அடுத்தடுத்து இரண்டு ஜனாதிபதி தேர்தல்களில் வாய்ப்புக்களை சரத் பொன்சேகாவுக்கும் மைத்திரிபால சிறிசேனாவுக்கும் விட்டுக் கொடுத்து அதில் ஒன்றில் அரசியல் வெற்றியும் கண்டவர் ரணில்.

ரணிலைப் போல இரண்டு தடவைகள் - கோட்டபாயவிடமும், அநுர குமாரவிடமும் ஜனாதிபதித் தேர்தல்களில் தோற்ற பின்னரும், இப்போது பெரும் சக்தியாக விஸ்வரூபம் எடுத்திருக்கும் இடதுசாரிகளான தேசிய மக்கள் சக்தியை வீழ்த்துவதற்கு ஐக்கிய எதிரணியை உருவாக்குவதற்கு விட்டுக் கொடுத்து இடமளிக்காமல் முரண்டு பிடிக்கிறார் சஜித் பிரேமதாஸ.

இந்த அரசியல் சின்னத்தனம் காரணமாகவே எத்துணை மக்கள ஆதரவை வைத்திருந்தாலும் சஜித்தினால் அரசியல் சிறப்பில் ரணிலுக்கு கிட்டக் கூட நெருங்க முடியவில்லை.

அரசியலில் சுயநலம் தவிர்க்க முடியாததுதான். ஆனால் சுயநலம் மட்டுமே அரசியலாகி விட முடியாது.



# ஏக்கிய இராச்சியமும் எறும்புகளின் செயற்பாடும்



- கி.துரைராஜசிங்கம் -

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் நிகழ்ச்சி நிரலில் முதலிடம் வகிப்பது அரசியற் தீர்வு – தனியாக செயற்பட்டபோதும் கூட்டாக செயற்பட்டபோதும் – நிலைமை இதுவேதான். 2015 இல் உருவான அரசியற் கள நிலைவரம் கட்சியால் இவ்வகையிலேயே அணுகப்பட்டது. நாடாளுமன்றம் அரசியல் நிர்ணய சபையாக மாற்றப்பட்டமை, அரசமைப்பு உருவாக்க நடவடிக்கைக்குழு மற்றும் ஆறு உப குழுக்கள் அமைக்கப்பட்டமை எல்லாம் கட்சிக்கு அன்று ஆளும் கட்சியில் செலுத்தக்கூடியதாயிருந்த செல்வாக்கின் வெளிப்பாடுகளே.

உப குழுக்கள் அநேக கூட்டங்களை நடத்தின. நடவடிக்கைக்குழு எண்பத்துநான்கு அமர்வுகளை மேற்கொண்டது. இவற்றிலெல்லாம் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் துறைசார் நிபுணர்கள், உத்தியோகத்தர்கள் என்போர் இடம்பெற்று விவாதங்கள் நுண்ணாய்வுகள், வரைவுகள், திருத்தங்கள், மாற்றங்கள் என்பன வெல்லாம் இடம்பெற்று 21 செப்ரெம்பர் 2017 இல் நடவடிக்கைக்குழு இடைக்கால அறிக்கையைப் நாடாளுமன்றில் சமர்ப்பித்தது.

தமிழ்ர் தேசியக் கூட்டமைப்பின் எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் தத்தமக்குக் கொடுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் தம் பணியை சிறப்புறச் செய்தனர். சம்பந்தன் ஐயாவும் சுமந்திரன் அவர்களும் நடவடிக்கைக் குழுவில் பங்குபற்றி சமஷ்டிக் கட்டமைப்புக்கொண்ட அரசமைப்பை உருவாக்குவதில் கடினமாய் உழைத்தார்கள். இது அத்தனை இலகுவான காரியமல்ல – நல்லெண்ணம் மட்டும் இதனை சாதிக்காது. சமஷ்டிக் கட்டமைப்பில் உள்ள நன்மைகள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், இன நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் என்பதற்கான ஆதாரங்களை அடுக்குவது மட்டும் பெரும்பான்மை மற்றும் தமிழ் பேசும் நமக்கடுத்த சிறுபான்மைத் தலைவர்களையும் நிபுணர்களையும் சம்மதிக்க வைத்துவிடாது.

சமஷ்டி என்றால் சிங்கள மக்களும், ஒற்றையாட்சி என்றால் தமிழ் மக்களும் அச்சப்படுகின்றார்கள். எனவே, அவர்தம் அச்சங்களை அகற்றும் வகையில் நமது நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்றார் ஜனாதிபதி மைத்துரிபால சிறிசேன. இவ்விடயத்தில் இணக்கப்பாட்டை எட்ட அதிக காலம் எடுத்தது.

ஒரு கட்டத்தில் ஒற்றையாட்சிக்கு ஒத்த ஆங்கிலப் பதமான Unitary என்ற பதம் கூட தமக்கு அச்சத்தை ஏற்படுத்துவதாக சிங்களத் தலைவர்களும் நிபுணர்களும் கருத்துரைத்தார்கள்.

Unitary என்னும் பதத்தைக் கையாளும் பிரித்தானியாவின் நிலைமைகளை அவர்கள் ஆய்வுக் குட்படுத்தினார்கள். வேல்ஸ் மற்றும் ஸ்கொட்லாந்தின் செயற்பாடுகளின் அடிப்படையில் ருனைவயசல ளுவயவந என்பது பிரிந்து செல்லும் அளவுக்கு விரிவடைந்துள்ளது என்பது, மேற்படி தரப்பினரை அச்சத்துக்குள்ளாக்கியது. எனவே அப்பதத்தையும் அதற்குச் சமமானதாக இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ஏக்கிய ரஜய (ඒකීය රජය) என்ற பதத்தையும் தவிர்பதற்கே அவர்கள் விரும்பினர்.

இச்சமயத்தில் தான் “ஒருமித்த நாடு” என்னும் பதத்தை சம்பந்தன் ஐயா முன்மொழிந்தார்.

அதற்குச் சமமான கருத்துடையதாகவே ஏக்கிய இராஜ்ஜிய (ඒකීය රාජ්‍යයක්) என்ற பதத்தை பயன்படுத்தலாமென சிங்களத் தரப்பினர் முன்மொழிந்தனர். இதில் வேறுவித பொருள்கோடல்கள் இடம்பெறக் கூடாது என்பதற்காகவே இடைக்கால வரைபில் Unitary என்கிற ஆங்கிலப் பதம் முற்றாகவே தவிர்க்கப்பட்டு ஏக்கிய இராஜ்ஜிய / ஒருமித்த நாடு எனும் இரட்டைப்பதம் மூன்று மொழி வரைவுகளிலும் இடம்பெற்றுள்ளது.

நல்லாட்சிக்கால அரசமைப்பு வரைவு பற்றி மக்களிடம் எடுத்துச் சொல்லும் அன்பர்கள் இவ்விடயத்தை உள்ளபடியே விளக்குவதே அறம் ஆகும். ஆக இவ் வரைவில் உள்ள ஏக்கிய இராஜ்ஜிய / ஒருமித்த நாடு என்பது முன்னைய அரசமைப்புகளில் சொல்லப்பட்ட (தமிழில்) ஒற்றையாட்சியோ (சிங்களத்தில்) ஏக்கிய ரஜயவோ (ஆங்கிலத்தில்) Unitary State ஓ அல்ல – அது ஏக்கிய இராஜ்ஜிய/ ஒருமித்த நாடு என்ற இரட்டை பதம் கொண்ட ஒரே சொல் – இதை தமது வசதிக்கேற்ப ஏக்கிய இராஜ்ஜிய என்றோ ஒருமித்த நாடு என்றோ பிரித்துச் சொல்வது பிழை மட்டுமல்ல அவ்வரைவே சட்டப் பெறுமதியைப் பெற்ற பின்னர் அவ்வாறு குறிப்பிடுவது வழக்கிடு தன்மை கொண்ட ஒரு குற்றச்சாட்டுக்கும் உரிய தாகும்.

தொடர்ச்சி▼



# ஏக்கிய இராச்சியமும் எறும்புகளின் செயற்பாடும்


தொடர்ச்சி▲

இச்சொற்களை வரைவில் பொறிக்கச் செய்வதற்கு சம்பந்தன் ஐயாவும், சுமந்திரன் அவர்களும் எடுத்துக்கொண்ட மிக வெளிப்படையான, யாரையும் ஏமாற்றும் நோக்கம் கொண்டதாய் அல்லாத, கபடத்தனமற்ற முயற்சிக்கு களங்கம் கற்பிப்பது "நெஞ்சத்துச் கோடாமை" கொண்ட நல்லோர்க்குரிய யோக்கியதை ஆகாது. இதே இயல்புகளுடன்தான் மேற்சொன்னவாறு "ஒற்றை ஆட்சி" என்னும் பதமும், வரைவில் நீக்கப்பட்டுள்ளது.

இம்மட்டோடு இவ்விடயம் நின்றுவிடவில்லை. குறித்த சொற்களைத் தாங்கிய வரைவின் உறுப்புரையை நாம் முழுமையாகப் படித்து பொருள் காண வேண்டும். உறுப்புரை இதுதான், "ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசமைப்பில் குறிப்பிட்டவாறு தத்துவங்களை பிரயோகிப்பதற்கு ஏற்புடையதான மத்திய மற்றும் மாகாணங்களின் நிறுவனங்களைக் கொண்டுள்ள சுதந்திரமும், இறைமையும், தன்னாதிக்கமும் கொண்டுள்ள ஏக்கிய இராச்சிய / ஒருமித்த நாடு எனும் குடியரசாகும்."

தற்போது நடைமுறையிலுள்ள அரசமைப்பில் இவ்விடயங்கள் பின்வருமாறு பதிவிடப்பட்டுள்ளன.

உறுப்புரை -1- "இலங்கை, சுதந்திரமும் இறைமையும், தன்னாதிக்கமும் கொண்ட சனநாயக சோசலிசக் குடியரசாகும் என்பதோடு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு என அறியப்படுத்தலும் வேண்டும்."



உறுப்புரை – 2 – "இலங்கைக் குடியரசு ஒற்றையாட்சியுடைய அரசாகும்."

மேற்குறித்த இரண்டு உறுப்புரைகளையும் ஒரு சேர உற்றுநோக்குவோமாயின் பின்வரும் முடிவுக்கு வரலாம்.

1. நடப்பு அரசமைப்பின் இரண்டாம் உறுப்புரை – மேற்குறித்த வரைவில் முற்றாகவே இடம்பெறவில்லை.(அதாவது "ஒற்றையாட்சி"என்ற பதம் முற்றாகவே நீக்கப்பட்டுள்ளது.)

2. இறைமையும் தன்னாதிக்கமும்........ என்ற விடயங்கள் அப்படியே உள்ளன.

3. ஜனநாயக சோசலிசக் குடியரசு என்ற விரிவு நீக்கப்பட்டு "குடியரசாகும்" என்ற பதம் மட்டுமே வரைவில் உண்டு.

4. மேலதிகமாக, "அரசமைப்பில் குறிப்பிட்டவாறு தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு ஏற்புடையதான மத்திய மற்றும் மாகாணங்களின் நிறுவனங்களைக் கொண்டுள்ள" எனும் சொற்பதங்கள் இடம்பெற்றுள்ளன.

வரைவின் உட்சென்று நோக்கிடும் போது அரசமைப்பின் தத்துவங்களைப் பிரயோகிக்கும் – மத்திய மற்றும் மாகாணங்களின் – நிறுவனங்கள் யாவை என்பது தெளிவாகும்.அவையே, 1. நாடாளுமன்றம் 2. இரண்டாம் சபை 3.மாகாண சபை என்பனவாகும்.

இரண்டாம் சபை என்பது 55 உறுப்பினர்களைக் கொண்ட சபையாகும். இதற்கான 45 உறுப்பினர்களை ஒவ்வொன்றுக்கும் ஐவைந்து என்ற அடிப்படையில் ஒன்பது மாகாண சபைகளும் பெயர்குறித்து நியமிக்கும். மிகுதி 10 போரையும் நாடாளுமன்றம் நியமிக்கும். இப்பத்துப் பேரும் பகிரங்க வாழ்வில் அல்லது உயர்கல்வியில் தமக்கெனச் சிறந்த நிலையை ஏற்படுத்திக் கொண்ட கீர்த்திவாய்ந்த நேர்மையுடைய ஆள்களால் அமைவர்.

இச்சபையின் முக்கியத்துவம், வரைவின் பின்வரும் வாசகங்களால் வெளிப்படுகின்றது, "நாடாளுமன்றம் மற்றும் இரண்டாம் சபை ஆகிய இரண்டினாலும் விசேட (2 / 3) பெரும்பான்மைகளுடன் நிறைவேற்றப்பட்டாலன்றி எந்தவித அரசியலமைப்புத் திருத்தமும் சட்டவாக்கம் செய்யப்படலாகாது".

மாகாண சபைகளைப் பொறுத்தவரையில்

தொடர்ச்சி▼



# ஏக்கிய இராச்சியமும் எறும்புகளின் செயற்பாடும்

தொடர்ச்சி▲

1987 / 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தில் உள்ளபடியானதும் அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி இந்திய அரசிடம் முன்மொழிந்த 12 திருத்தங்களுடனும் கூடிய அதிகாரங்கள் கொண்ட மாகாணசபைகளை நடைமுறைபடுத்துமாறு அரசை வலியுறுத்துவது இன்றியமையாதது.

இவையெல்லாம் வடக்கு கிழக்குக்கானது என்பதற்கப்பால் முழு நாட்டுக்கும் நன்மை பயப்பன என்பதைச் சகலரும் மனம்கொள்ள வேண்டும். மேற்குறித்த வரைவு தொடர்பான மாகாண முதலமைச்சர்களின் கருத்துக்கள் அறியப்பட்டபோது மேல் மாகாண முதலமைச்சர் அவர்கள் "ஆளுநர்கள்" என்ற நியமனமே இருத்தல் கூடாது என முன்மொழிந்தமையும் நோக்கத்தக்கது.

குறித்த வரைவை உருவாக்குவதில் மேற்குறித்தவாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கும் பணியும் ஆற்றினர் என்பதோடு, சம்பந்தன் ஐயா தனது மாவட்டப் பணிகளை மேற்கொள்வதற்காக தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினரை நியமித்துவிட்டு வரைவை உருவாக்கும் பணியில் தன்னை முற்றுமுழுதாக ஈடுபடுத்தி உழைத்தமையைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன் அவர்கள் அடிப்படை உரிமைகள் சம்பந்தமான உப குழுவின் தலைமையை ஏற்றுப் பணியாற்றி சிறந்ததோர் உபகுழு அறிக்கையைச் சமர்ப்பித்தார். திரு. மாவை சேனாதிராசா அவர்கள் தனக்கொரு உதவியாளரை நியமித்துக்கொண்டு சட்டம் – ஒழுங்கு உபகுழுவில் சிறப்பாகப் பணியாற்றி அக்குழு பல முக்கிய விடயங்களை உள்வாங்கும்படி செய்தார்.

வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு 8 தமிழ் மாவட்டங்களிலும் அவ்வரைவை எடுத்துச் சென்று மக்களுக்கு தெளிவூட்டம் செய்து எழுப்பப்பட்ட வினாக்களுக்கு பொருள்பொதிந்த விளக்கங்களை அளித்தது.

வனவள – வனசீவராசிகள், தொல்லியல், மகாவலி அபிவிருத்தி போன்ற திணைக்களங்களின் செயற்பாட்டுத் தன்மைகளை உள்ளடக்கியதான ஏற்பாடுகளையும் செய்த பின் 2018 நவம்பர் 07 இல் இறுதி வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட இருந்தது.

தமிழ்ப் பேசும் மக்களின் பிரச்சினைகளை அதி உச்ச அளவில் தீர்த்து, நாட்டை சிறந்த ஒரு தரத்துக்கு இட்டுச்செல்லவிருந்த அந்த அரச சபையின் கனதியின்பால் காழ்ப்புணர்வு கொண்டோர், ஜனாதிபதி மைத்திரிபால அவர்களின் பலவீனத்தைப் பயன்படுத்தினார்கள். அப்பம் உண்டு வெளியேறியவருக்கு அறுசுவை உண்டி படைப்பது போல மாயத்தோற்றம் காட்டினார்கள். விளைவு 2018 அக்டோபர் 26 இல் திடீர் பிரதமர் தோன்றினார். வெண்ணை திரண்டு வந்தபோது தாழி உடைந்தது.

இந்த அபாக்கியம் நிகழாதிருந்திருந்தால் அதி உச்ச அதிகாரப் பகிர்வோடு கூடிய அரசமைப்பொன்று உருவாகியிருக்கும். இந்த உண்மைகளை உள்வாங்கிக்கொண்டே 2017 ஆம் ஆண்டின் அரசமைப்பு வரைவு பற்றி பேச முயலவேண்டும், அவ்வாறின்றி கீறல் விழுந்த இசைத் தட்டாக ஏக்கிய ராச்சிய .... ஏக்கிய ராச்சிய ....என ஏகதாளத்துக்குச் சொல்லிக்கொண்டிருப்பது அறம் ஆகாது. ஒருவர் அப்படிச் சொல்கின்றார் என்பதற்காக – அலசி, ஆய்ந்து கருத்துப்பகிரவேண்டிய பொறுப்புள்ள பெருமக்கள் பக்கவாத்தியம் வாசித்தலும் அறமல்ல.

அவ்வாறு அறம்மீறி நடந்துகொண்டால் வண்ணத்துப் பூச்சியை கரப்பானெனக்கருதி அதனை அழிப்பதற்கான கிருமிநாசினி தெளிக்க, வாக்களித்த எறும்புகளும், ஏதுமறியாதிருந்த வீட்டு ஈயும் எய்திய நிலைமையே நாமும் எய்திட மாட்டோமா? என எண்ணுவதும் தேறுவதும் எமது கடன்.





# சாலை உதவி முகாமையாளர் - வவுனியா எம்.பி. இ.போ.ச. பஸ் சேவை குறித்துக் கடும் தர்க்கம்!

(கி.வசந்தன்)

வவுனியாவின் சில கிராமங்களுக்கு இ.போ.சபை பஸ் சேவை சீரின்மை தொடர்பில் கேள்வி எழுப்பிய வன்னி மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நடாளுன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனுக்கும், இ.போ.சபை வவுனியா சாலை உதவி முகாமையாளருக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்ப்பட்டது.

வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்பு கூட்டம் நேற்று முன்தினம் மாலை செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற போதே இந்த தர்க்க நிலை ஏற்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

வவுனியாவின் கூமாங்குளம், கள்ளிக்குளம், கந்தபுரம், வேலங்குளம் உள்ளிட்ட பல கிராமங்களுக்கு இ.போ. சபையின் பஸ் சேவை சீராக இடம்பெறுவதில்லை எனவும், இதனால் மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் பாதிக்கப்படுகின்றனர் எனவும் தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனால் கேள்வி எழுப்பபட்டது.

இதற்கு பதில் அளித்த இ.போ.சபை வவுனியா சாலை உதவி முகாமையாளர் -

எமக்கு சாரதிகள், காப்பாளர்கள் பற்றாக்குறை உள்ளது. எங்களால் முடிந்தளவு நாம் செயற்படுகின்றோம். இல்லாத விடத்து நடத்துங்கள் என்றால் எம்மால் எப்படி செயற்பட முடியும்? நீங்களே எமக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு இந்த பஸ் ஏன் வரவில்லை என கேட்கிறீர்கள். எங்களது இடத்தில் இருந்து பார்த்தால் எங்கள் நிலைமை தெரியும். விபத்து நடந்தால் நான் அந்த இடத்திற்குப் போக வேண்டும். அப்போது பஸ்ஸை அனுப்ப சொன்னால் நான எப்படி அனுப்புவது? - எனத் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், "அரச அதிகாரிகள் கதைக்கும் போது தெளிவாக கதைக்க வேண்டும். மக்கள் பிரதிநிதி ஒருவர் தனது தனிப்பட்ட பிரச்சினையைக் கதைக்கவில்லை. மக்களது பிரச்சினையைத்தான் கதைக்கிறார். உங்கள் வேலையை விட்டுப் போங்கள். நான் இருந்து பார்க்கிறேன். என்ன கதைக்கிறீர்கள்? கேட்ட கேள்விக்குப் பதில் அளிக்கவும். மக்களது முறைப்பாடு வரும் போது உங்களிடம்தான் கேட்க முடியும். வீதியால் செல்பவனிடம் கேட்க முடியுமா? இது உங்களது கடமை. கேட்ட கேள்விக்கு பதில் வழங்குங்கள். சரியான முறையில் பதில் அளிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்." - எனத் தெரிவித்தார்.

இதன்போது பதில் அளித்த ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க "மக்கள் வரிப்பணத்தில்தான் உத்தியோகத்தர்கள் சம்பளம் பெறுகிறார்கள். எங்களுக்கு தேவைப்பாடுகள் இருக்கின்றன. மக்களது தேவைகள், அபிவிருத்தி தொடர்பில் இங்குதான் கதைக்க முடியும். இதில் அமைதியாகவும், பொறுமையாகவும் கதைக்க வேண்டும். புத்திசாதுரியகமாக நடக்க வேண்டும். நாங்கள் உங்களை வரவேற்கின்றோம். இ.போ.சபைக்கு திறைசேரியில் இருந்து பெருமளவான பணத்தை ஒதுக்கீடு செய்கின்றோம். வவுனியாசாலை நட்டத்தில் இயங்குகின்றது. மகக்ள் வரிப்பணத்தில் வவுனியா சாலைக்கும் பெருமளவு பணம் சம்பளத்திற்காக வழங்குகின்றோம். சங்கமாக கதைப்பதாக இருந்தால் வெளியில் வந்து அப்படிக் கதைக்க வேண்டும். இங்கு உள்ள பற்றாக்குறை தொடர்பில் எமக்கும் தெரியும். அது தொடர்பில் கதைப்பதானால் வெளியில்தான் கதைக்க வேண்டும். மக்களுக்கான சேவைக்காகத் தான் நிதி ஒதுக்கீடு செய்கின்றோம். அதற்கான சேவைவை உரிய கால அட்டவணை படி நீங்கள் செயற்பட வேண்டும். - எனத் தெரிவித்தார்.





















# கொழும்பு சைவ மங்கையர் கதம்ப விழா

கொழும்பு வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களின் பல்வகை பொழுது போக்கு நிகழ்வான கதம்ப விழா வெள் ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நேற்று முன்தினம் காலை அதிபர் திருமதி அருந்ததி இராஜவி ஜயன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கல்விஅமைச்சின் ஆரம்பபிரிவு பிரதிப் பணிப்பாளர் திரு மதி. சகுந்தலாதேவி மனோகரன் கலந்து கொண்டார்.

அவரை மண்டப வாயிலில் இருந்து அதிபர் அருந்ததி இராஜவிஜயன் தலை மையில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் அழைத்து வருகின்றமையையும், ஆரம்பப் பிரிவு உதவி அதிபர் திருமதி சிவகாமி தியாகராஜா பொன்னாடை போர்த்தி கௌரவிக்கின்றமையையும் அருகில் தமிழ் மாணவமன்ற பொறுப் பாசிரியர்

மாலா தேவதாஸ் நிற்கின்றம சியையும் கலை நிகழ்வையும் கலந்து கொண்டோரையும் காணலாம்.
























# அழுகிய மரக்கறிகள் சமையலுக்கு தயாராக வைத்திருந்த ஆடை உற்பத்தி நிலையத்துக்கு ரூ. 30 ஆயிரம் அபராதம்

## புதுக்குடியிருப்பில் சம்பவம்

(பா.சதீசன்)

முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு நகரத்தை அண்டிய பிரபலமான ஆடை உற்பத்தி நிறுவனமொன்றில் அழுகிய நிலையில் இருந்த மரக்கறிகளை சமையலுக்காக தயாராக வைத்திருந்த குற்றச்சாட்டில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதில் ரூபா 30,000 அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில், பொது சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை மேற்கொண்டபோது, சமையலறையில் பழுதடைந்த மற்றும் அழுகிய நிலையில் இருந்த மரக்கறிகள் சமையலுக்கு தயாராக வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டிருந்தது.

இது தொடர்பில் வழக்கு பதிவு செய்யப்பட்டு முல்லைத்தீவு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அந்த நிறுவனம் மீது 30,000 ரூபா அபராதம் விதித்ததுடன், எதிர்காலத்தில் இதுபோன்ற குற்றச்செயல்கள் மீண்டும் இடம்பெறாதவாறு எச்சரிக்கையும் மன்றால் விடுக்கப்பட்டது.

இச்சோதனை நடவடிக்கை பொது சுகாதார பரிசோதகர்களான கோகுலன், பிரதாஸ் மற்றும் றொஜிஸ்ரன் உள்ளிட்டவர்களினால் மேற்கொள்ளப்பட்டது.

# பம்பலப்பிட்டியில் பரதநாட்டிய அரங்கேற்றம்



அமிர்தாலயா நடனப்பள்ளியின் நிறுவனர் நாட்டிய கலைமணி ஸ்ரீமதி சர்மிளா தேவி சுந்தரின் மாணவியும் திரு. திருமதி சதாநந்தன் குமுதினி தம்பதியின் புதல்வியுமான செல்வி சங்சனாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 5ஆம் திகதி புதன் கிழமை மாலை 5 மணிக்கு பம்பலபிட்டி, புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் நீதிமன்ற நீதியரசரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எஸ்.துரைராஜாவும், கௌரவ விருந்தினர்களாக ஆஹாஸ் நிறுவனரும் கொழும்பு கேம்பிரிட்ஜ் பாடசாலையின் இயக்குனருமான பிரதீப் குமார் முத்துசாமி மற்றும் புத்தசாசன மத மற்றும் கலாச்சார விவகார அமைச்சின் கலாசார மேம்பாட்டு இயக்குநர் டாக்டர். பிரசாத் ரணசிங்கவும், சிறப்பு விருந்தினராக காட்சி மற்றும் நிகழ்த்து கலை பல்கலைக்கழகத்தின் இந்திய மற்றும் ஆசிய நடனத் துறை, நடனம் மற்றும் நாடக பீடத்தின் டாக்டர். பாலிகா சமந்தியும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.








# புதுக்குடியிருப்பில் 300 ஏக்கர் நிலத்தில் பயிரிடாமல் காத்திருக்கும் விவசாயிகள்!

## அணைக்கட்டு திருத்தப் பணிகள் இழுபடுகின்றமையால்

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு கிழக்கு கமக்கார அமைப்பின் கீழ் உள்ள சித்தாறு, சிவசாமி மற்றும்வீரசிங்கம்ஆகியமூன்றுஅணைக் கட்டுக்கள் 85 மில்லியன் ரூபா மதிப்பி லான உலக வங்கியின் நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன. எனினும், இப்பணிகள் நீண்டநாளாக முடிவுறாத நிலையில் உள்ளமையால், விவசாயிகள் கடும் அதிருப்தி வெளி யிட்டுள்ளனர்.

சித்தாறு அணைக்கட்டு தற்போது ஆரம்பக்கட்டப் பணிகளில் உள்ளது. சிவசாமி அணைக்கட்டில் கதவு பொருத் தும் பணி இன்னும் தொடங்கப்படாத நிலையில் காணப்படுகிறது. வீரசிங்கம் அணைக்கட்டின் பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், மூன்று அணைக்கட்டுகளும் முழுமையாகப் பயன்பாட்டுக்கு வராத நிலையில் விவ சாயிகள் விரைவில் பணிகளை முடிக்கக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விவசாயிகளின் கோரிக்கையைய டுத்து, காலநிலைக்கு சீரமைவான நீர்பாசன விவசாய திட்ட பணிப்பாளர், உலக வங்கியின் இலங்கை பிரதிநிதி, கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட குழுவினர் நேற்று அணைக் கட்டுகளுக்குச் சென்று அவற்றின் நிலை மைகள் தொடர்பில் நேரில் ஆய்வு மேற் கொண்டனர்.

இந்தப் பணிகள் கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதங்களில் நிறைவு செய்யப்படும் என ஒப்பந்தக்கா ரர்கள் தெரிவித்திருந்த போதிலும், கடந்த இரண்டு மாதங்களாக வேலையில் இடைநிறுத்தம் ஏற்பட்டுள்ளதுடன்வற் றுக்கு ஒவ்வொரு காரணங்களை கூறி வருகின்றனர் என விவசாயிகள் குற்றம் சுமத்தினர்.

நேற்றைய சந்திப்பின் போது ஒப்பந் தக்காரர்கள் எதிர்வரும் நவம்பர் 4ஆம் திகதி முதல் பணிகளை மீண்டும் ஆரம் பிப்பார்கள்எனஉறுதியளித்தனர்.மேலும், நவம்பர் 15ஆம் திகதிக்குள் பணிகளை ஆரம்பிக்க தவறின், அவர்களின் ஒப்பந் தம் ரத்து செய்யப்பட்டு மாற்று வழியில் புனரமைப்பு மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

விவசாயிகள் அணைக்கட்டுகள் எங்களுக்கு மிகவும் அவசியம். இதனால், கடந்த சிறுபோகத்தில் சுமார் 300 ஏக் கர் நிலங்களைப் பயிரிடாமல் காத்தி ருந்தோம். முல்லைத்தீவில் அதிக விளைச்சலைக் கொடுக்கும் வயல் நிலங் களில் இதுவும் ஒன்றாகும். அடுத்த வருட சிறுபோகத்திலும் அதே நிலை காணப்படக்கூடும் என குற்றம் சாட்டி னர்.

இந்தச் சந்திப்பில் காலநிலைக்கு சீரமைவான நீர்பாசன விவசாய திட்ட பணிப்பாளர் சமன் பந்துலசேன, உலக வங்கியின் இலங்கை பிரதிநிதி, கம நல அபிவிருத்தி உத்தியோகத்தர் சுஜீ வரூபன், புதுக்குடியிருப்பு கிழக்கு கமக் காரஅமைப்பின்தலைவர்,செயலாளர்மற் றும் பல விவசாயிகள் கலந்துகொண்டு வாத பிரதிவாதங்களுடன் தமது கருத் துக்களை முன்வைத்திருந்தனர்.
















# புத்தளத்தில் கரைவலையில் நேற்று பெருமளவில் சிக்கிய பாரை மீன்கள்

**(உடப்பு க.மகாதேவன்)**

புத்தளம் உடப்பு செவ்வபுரம் கடற்பரப்பில் நேற்றுப் பெருந்தொகையான பாரை மீன் மற்றும் வங்கடை மீன்கள் கரைவலையில் பிடிக்கப்பட்டுள்ளன.

காலையில் கரைவலை வளைத்த நேரத்தில் இவை வலையில் சிக்கின. பிற்பகலில் அவை கரை சேர்கப்பட்டன.

சுமார் 20ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாரைமீன்கள் இவ்வருடத்தில் பிடிக்கப்பட்டமை இதுவே முதற்தடவையாகும்.

இவை ஒவ்வொன்றும் 7கிலோ தொடக்கம் 8 கிலோ வரை எடை கொண்டவையாகக் காணப்பட்டன. இதனால் மீனவர்கள்பெரிதும் சந்தோஷமடைந்தனர்.









# கனடா – யாழ்ப்பாண முஸ்லிம்களின் ஒன்றுகூடலும் கௌரவிப்பு நிகழ்வும்

கனடாவில் வாழும் யாழ் முஸ்லிம் சமூகத்தினருக்கும் யாழ் மண்ணில் வாழ்ந்துவரும் உறவுகளுக்கும் இடையிலான நட்புறவையும் ஒருமைப்பாட்டையும் வலுப்படுத்துமுகமாக யாழ் ஒஸ்மானியா கல்லூரி மஹ்மூத் மண்டபத்தில் வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஒன்றுகூடலும் கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

ஆசிரியர்கள், சாதனை படைத்த மாணவர்கள், அரசியல் பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் அப்துல் கபூர் ஞாபகார்த்த விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.





# ‘குரலற்றவர்களின் குரல்’ அமைப்பினைச் சந்தித்து உரையாடினார் ரவிகரன் எம்.பி.

## சிறையில் வாடும் தமிழ் அரசியல்கைதிகளின் விடுவிப்புத் தொடர்பில் ஆராய்வு

(விஜயரத்தினம் சரவணன்)

சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்ற அமைப்பான “குரலற்றவர்களின் குரல்” அமைப்பு மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் சிலரையும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

யாழ்ப்பாணம் – குருநகர் பகுதியில் அமைந்துள்ள “குரலற்றவர்களின் குரல்” அமைப்பின் காரியாலயத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்புத் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பங்கேற்றிருந்த “குரலற்றவர்களின் குரல்” அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் மற்றும் அந்த அமைப்பின் செயற்பாட்டாளர்கள், தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் ஆகியோரால் சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளின் நிலைமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

அதேவேளை தமிழ் அரசியல் கைதிகளை சிறைச்சாலைகளில் நேரடியாகச் சென்று பார்வையிடுமாறும், அவர்களின் உறவினர்கள் ஜனாதிபதியுடன் பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்தோடு தமிழ் அரசியல் கைதிகளின் விவரங்களை இதன்போது “குரல் அற்றவர்களின் குரல்” அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகன் மற்றும் தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கையளித்திருந்தனர்.

இந்நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பில் தம்மால் தொடர்ந்து கவனம் செலுத்தப்படுமெனவும், உரிய இடங்களுக்குக் கொண்டுசென்று அவர்களின் விடுவிப்புத் தொடர்பில் தம்மால் வலியுறுத்தப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

மேலும் குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்களால் இக்கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பிலும் தாம் கவனம் செலுத்துவார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இதன்போது தெரிவித்தார்.









# மணி விழாக்காணும் கயிலைக்குருமணி தருமை ஆதீனக் குருமஹா சந்நிதானம்




**திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதினம் 27ஆவது குருமகாசந்நி தானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலா மணி தேசிக ஞானசம்பந்த பரமா சாரிய சுவாமிகளின் மணி விழாவை ஒட்டி இக்கட்டுரை பிர சுரமாகின்றது.**

திருக்கயிலாய பரம்பரை, திருநந்திமரபு, மெய் கண்டசந்தானம், சிவஞானசித்திநெறி, துறவறம், சித்தாந்த சைவஞான சுவாதீனமாய் திருச்சடா மகுடம் தாங்கி திருந்திய செங்கோல் செலுத்தி அருளாட்சி நடத்திவரும் தருமபுரம் ஆதீனம் 27 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலா மணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமி கள் நடுநாடு திருஎருக்கத்தம்புலியூரில் சர்வசித்து வருடம் ஐப்பசி -1 இல்(17.10.1965) ஞாயிறு கூடிய சுபநாளில் திரு. மறைஞானசம்பந்தம் பிள்ளை, அலர்மேலு மங்கை அம்மை தம்பதிகளுக்கு மூத்த தவப்புதல்வராய் அவதரித்தவர்கள். வேல்முருகன் என்பது பிள்ளைத் திருநாமம்.

சிறுவயதில் வளையமாதேவியில் வளர்ந்து, சீர் காழியில் கல்வி பயின்று, தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அரு ளுக்கு சற்பாத்திரராகி 23 ஆம் வயதில் துறவறம்



ஏற்று, ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரான் எனும் திரு நாமம் பூண்டு. மூவகை தீட்சைகளும் பெற்றவர்கள். தம்பிரான்களில் முதலில் ”முனைவர் ”பட்டம் பெற்று ஸ்ரீ காசிமடத்தின் கார்பாராக நிர்வாகம் மேற் கொண்டவர்கள்.

பழுத்தத் தமிழ்ப் புலமையால் பிரபந்தம் பல இயற்றியருளியவர்கள். எதையும் நயம்பட உரைக் கும் நாவன்மையும், சொற்றிறம்பாத கொள்கை யும் உடையவர்கள். காசியில் கர்ப்பவாசம் செய்த வர்கள். நான்கு முறை திருக்கயிலையைத் தரி சித்தவர்கள். ஆதீனத்தின் பிரதிநிதியாக 50க்கும் மேற்பட்ட அயல்நாடுகளுக்கு ஆன்மீகப் பயணம் மேற்கொண்டவர்கள். திருநெல்வேலி, திருச்சி ராப்பள்ளி மௌனமடம், சென்னை சமயப்பிரச்சார நிலையம், திருவையாறு தேவஸ்தானம் போன்ற பல இடங்களில் தலைமை பொறுப்புகள் வசித்து அரிய பெரிய திருப்பணி பல ஆற்றியவர்கள். தமக் குப் பின் ஆதீன கர்த்தர் ”உலகம் சுற்றிய தமிழன் குமாரசாமி தம்பிரானுக்கு உரியது” என்று 26 ஆவது குருமணிகள் உயில் சாசனம் எழுதியும் 02.02.2017 நாளன்று இவர்களுக்கு தம் திருக் கரங்களால் ஞானஅபிஷேகம் செய்து இளைய சந்நிதானமாக பட்டம் சூட்டினார்கள். 26 ஆவது குருமணிகளின் அவதார இல்லத்தை பெருந் திருக்கோயிலாக ஆக்கினார்கள். அனைத்துலக சைவசித்தாந்த மாநாட்டினை தம்பிரானாக இருந்து 4 ஆவது மாநாடும், சின்ன பண்டாரசந்நிதியாக வீற்றிருந்து 5ஆவது மாநாடும், மகாசந்நிதானமாக எழுந்தருளி 6 ஆவது மாநாட்டையும் பார்புகழும் வண்ணம் நடத்தியவர்கள்.

13.12.2019 இல் ஞானபீடம் ஏற்றருளியது முதல் 5 ஆண்டுகளில் ஓய்வறியாமல் உழைத்துத் தருமை ஆதீன 27 தேவஸ்தானங்களுக்கும் திருப்பணி, 120 உபகோயில்களுக்கும் உடனாகத் திருப்பணி, வெளிக்கோயில்களுக்கும் ஆவனவற்றைச் செய்தும் 500 திருக்கோயில்களுக்கு முகூர்த்தம் தோறும் குடமுழுக்கினை நானிலம் போற்றும் வண்ணம் நடத்திக் காட்டியவர்கள். அந்நிகழ்வுகளில் சைவா தீனங்கள், மடாதிபதிகள், மத்திய மாநில அரசின் பிரதிநிதிகள் முதல் உலகளாவிய பிரபலமானவர்கள் வரை ஆன்றோர் பலரும் பங்கேற்று சிறபித்துள்ளமை இவர்களின் தண்ணளிச் சிறப்பும் தனித்துவமுமாகும். 300 பவுன் பொற்பதக்கக் கலாநிதி விருதுகளை தம்திருக்கரங்களால் வழங்கி பல்துறை அறிஞர்களை ஆதரித்து ஊக்குவித்து வருகிறார்கள்.

கற்றளிகள், தேர்,வெள்ளிரதம், வாகனம், கொடி மரங்கள். திருவாபரணங்கள் என்று முன்புள்ள வற்றை திருத்தியும், புதியதாகச் செய்தும் அர்ப் பணித்துள்ளார்கள். ஆதீனக் கட்டளை மடங்களில் முன்பிருந்ததை பொலிவித்தும், திரும்பும் திசை யெங்கும் ஆதீனம் விளக்கமுற இமசேது பரியந் தம் புதியதாக இடம் வாங்கிப் பெரும்பொருட் செல வில் 40 கிளைமடங்களை நிறுவி தர்மபரிபாலனம் செய்து வருகிறார்கள்.

தம்பிரான் சுவாமிகள் தங்கும் அறைகள், அலு வலகம், சிப்பந்திகுடியிருப்புகள், கடைத் தொகுதிகள். மண்டபங்கள் பல கட்டி நிர்வாகம் மேம்படச்செய்து வருகிறார்கள்.

தொடர்ச்சி ▼

# மணி விழாக்காணும் கயிலைக்குருமணி தருமை ஆதீனக் குருமஹா சந்நிதானம்

தொடர்ச்சி ▲

சீர்காழி தேவஸ்தான திருப்பணியின்போது அரிய திருமுறைச் செப்பேடுகள் கண்டருளியவர்கள், ஒரு கோடி முறை பதிகம் ஓதிட, இரு கோடி முறை பஞ்சாட்சரம் எழுதி, 11 லட்சம் முறை ஸ்ரீ ருத்ரம் பாராயணம் செய்திட ஆணையிட்டும் தாமே முன் நின்று நிறைவேற்றியவர்கள்.

மணிவிழா ஆண்டில் திருத்தல வழிபாடாற்ற 27 நாளில் நாடு,நகரம், கிராமம், வயல், வனம், கடல், மலை, வானம் என்று 7000 கி.மீ பயணம் மேற்கொண்டு பாடல்பெற்ற தலம்,வைப்புத்தலம் 450 தையும் ஒரே சுற்றில் தரிசித்தும், ஆறு மாதங்களில் சிற்றூர் ஆலயமாக 1008 தரிசித்தும், மானோசரோவர் முதல் மாமகம் வரை, குடகுமுதல் குமரிவரை ஆயிரமாயிரம் தீர்த்தங்களில் சென்றாடிய புண்ணியச் சீலர். 121சிவாலயங்களில் ருத்ராபிஷேகம் செய்து பழைய வைதிக சைவம் தழைக்க அருள்சுரந்து வருகிறார்கள்.

ஆன்மீகப் பயணமாக ஐந்து ஆண்டுகளில் லட்சம் மைலில்கள் பயணம், சுமார் 50.000 கி.மீ இரத யாத்திரை, 1000 கி.மீ பாதயாத்திரை சென்ற ஒரே துறவி.இமயகேதாரம் பயணம் 20 மணி நேரத்



தில் சென்றுவந்தவர்கள். ஒரு நாள் பயணமாக வட மாநிலங்களுக்கும், தெற்கு ஆசிய நாடுகளுக்கும் விமான பயணம் செய்தவர்கள்.

இவ்வளவு பயணத்திலும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கநாதர் நித்திய பூஜையினை வழுவறச் செய்பவர்கள், சமயமும் தமிழும் தழைக்க மணி விழா ஆண்டு 365 நாளும் தினம் ஒரு திருநூல் வெளியிட்டும், மலிவு விலையில் திரு முறைத் தொகுதிகளைப் பதிப்பித்தும் வருகி-றார்கள். குருஞானசம்பந்தர் மின் சார்பாக 15 கல்வி நிறுவனங்கள் இருந்ததை 42 கல்வி ஆலயமாக பெருக்கி 20,000 மாணவர்களுக்கு இளமையில் கல்வி என்ற இலக்கை ஈடேற்றி வருகின்றார்கள். விஞ்ஞானம் வளர்க்க கலைக் கல்லூரியும், கலை ஞானம் பரவ இசைக்கல்லூரியும், மெய்ஞானம் போதிக்க சைவசித்தாந்த மாலைநேரக்கல்லூரி 16 மையங்களும் உயர்சிவஞானம் புரக்க வேதசிவாகம, தேவார பாடசாலைகள் நவீன வசதிகளுடன், புதியகட்டடம் கட்டி நடத்தி வருகிறார்கள், நவீன வலைதள ஊடகத்தின் வாயிலாக ஆதீனத்தின் அளப் பெரும்பணிகள் அயலுலகு அறியவும் பயனுறவும் புதுமை பல செய்து நாளிதழ்களில் இடம் பெறாத நாளில்லை என்று நாளும் சரித்திரம் படைத்து வருகிறார்கள்.

கோ.கெஜ,ஒட்டக, அசுவ, அஜ சாலை அமைத்தும் வாயுறை அளித்தும் ஜீவராசிகள் வாழ வகை செய்துள்ளார்கள். லட்சம் மரக்கன்றுகளை நட்டுள்ளார்கள். மாசிலா உரச்சாலை, சிறுகுறுதொழில் சாலை, மங்கலப்பொருள் தயாரிப்புச் சாலை, சந்தை முறை பண்டகசாலை, இயற்கை மருத்துவசாலை, யோகசாலை, பசிப்பிணி போக்கும் பாகசாலை (ரூ 10 உணவுச்சாலை). கொரோனா நோய் தொற்றுக் காலத்தில் ஒருபுறம் மருத்துவ சேவையும் மறுபுறம் மூன்று உத்தம பட்ச யாகசாலையோடு வைத்தியநாதர் கும்பாபிரேகமும் செய்து கொரோனா நோய் அகல, உயிர்கள் வாழ பிரார்த்தித்து இன்று வரை அடிப்பிரதட்சணம் செய்பவர்கள் பேரிடர் காலத்தில் சந்நியாசி நிலையிலிருந்து களமிறங்கி சமூகப்பணியாற்றியதை யார் தாம் மறப்பர்?

தடை வென்று சிவிகாரோகணம் செய்து தனிப் பெரும் சைவ பேரரசராக திகழும் ஸ்ரீலஸ்ரீ 27 ஆவது கயிலை குருமணிகளின் மணிவிழாவினை முன்னிட்டு 01.11.2025 முதல் 10.11.2025 வரை கலை இலக்கிய கருத்தரங்க மாநாடு நடைபெற உள்ளது. 32 தானங்கள் முதல் நலத்திட்டங்கள் பல நல்கி அருளிட உள்ளார்கள். மற்றும் 6.11.2025 முதல் 10.11.2025 வரை சொக்கநாதர், குருமுதல்வர், 27ஆவது குருமணிகள் ஆகிய குரு லிங்க சங்கம மூர்த்திகளுக்கு 8 கால யாகபூஜைகளும் நடைபெற்று விசுவாவசு வருடம் ஐப்பசித் திங்கள்-24 புனர்பூசத் திருநாள் 10.11.2025 மணிவிழா அன்று மகா அபிஷேகமும், கனகாபிஷேகமும் நடைபெறவுள்ளன.

குறிப்பாக உலகெங்கும் வாழும் சைவச்சிறார்களின் கலை, பண்பாடு, கலாச்சாரம் மற்றும் விழுமியம் என்பவற்றின் முன்னேற்றத்தினை கருத்தில் கொண்டு, அச்சுவேலி உழவிக்குளம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், அச்சுவேலி சிவா கமஞானபானு சிவஸ்ரீ ச குமாரசாமி குருக்கள் அவர்கள் நினைவு அறக்கட்டளை, பிரித்தானிய சைவ முன்னேற்ற சங்கம் என்பன இணைந்து நடாத்தும் அகிலமெங்கும் ஒலித்திடும் சிவநெறிய திருமுறை விண்ணப்ப தெய்வீக திருவரங்கு சுவாமி அவர்களின் வழிகாட்டல்களுடன் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கீரிமலை நகுலேஸ்வரப்பெருமான் ஆதீனகர்த்தர் நகுலேஸ்வர குருக்கள், இணுவில் தர்ம சாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தானு மஹா தேவ குருக்கள், மாவையாதீனம் இரத்தின சபாபதி குருக்கள், சுன்னாகம் சிவஸ்ரீ சர்வேஸ்வர குருக்கள், நயினை வாமதேவ குருக்கள், அச்சுவேலி சிவஸ்ரீ வைத்தீஸ்வர குருக்கள், வட்டுக்கோட்டை பிரசாந்த குருக்கள், கனடா ஸ்ரீ வரசித்தி விநாயகர் பஞ்சாட்சர குருக்கள் (ஐயாமணி குருக்கள்) உள்ளிட்ட இலங்கை சிவாச்சார்யார்களுக்கு ‘சிவாகம கலாநிதி’ எனும் சிறப்புடன் கௌரவம் வழங்கியதுடன் ஈழநல்லூர் பாலமுருகன், கோண்டாவில் குமரன் உள்ளிட்ட கலைஞர்களுக்கு ‘நாதஸ்வர கலாநிதி’ எனும் சிறப்புடன் சிவபூமி அறக்கட்டளை ஆறு திருமுருகன் அவர்களின் சமய சமூக பணிக்காக சிறப்புடன் கௌரவம், பட்டம் வழங்கி ஈழத்திற்கான ஆதீன மடத்தின் தொடர்பினையும் உறுதியாக பேணி வரும் பெருந்தகை.

(குருமஹா சன்னிதானம் அவர்களிடம் மணிவிழா அழைப்பிலிருந்து தொகுப்பு)

**சிவாகமகலாநிதி. சிவஸ்ரீ.**
**கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்**
**(தலைவர், இந்துக் குருமார் அமைப்பு,**
**தலைவர், அகில இலங்கை இந்து**
**கலாச்சார பேரவை)**

# மின்சார சபை வருமானம் 6 மாதங்களில் குறைந்தது

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

2025ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மின்சார விற்பனையிலிருந்து கிடைத்த வருவாய் 38.8 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளதாக 2025 ஆம் நிதி ஆண்டின் நடு ஆண்டு நிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி மின்சார விற்பனையிலிருந்து பெற்றுக்கொண்ட வருவயாக 192.6 பில்லியன் ரூபாய் பதிவாகியுள்ளது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மின்சார விற்பனையிலிருந்து பெற்றுக் கொண்ட வருவாய் கடந்த 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 314.4 பில்லியன் ரூபாயாக உள்ளது.

2025ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் மின்சாரத்திற்கான தேவை 4.3 சதவீதம் அதிகரித்து 7,814 ஜிகாவோட் ஆக உயர்ந்த போதிலும், 2024 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தில் 7,491 ஜிகாவோட் ஆக இருந்தது.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இலங்கை மின்சார சபையின் நேரடி உற்பத்தி செலவு 8.7 சதவீதம் குறைந்து 144.3 பில்லியன் ரூபாவாக இருந்தது.

இது 2024 ஆம் ஆண்டின் அதே காலகட்டத்தில் 158.1 பில்லியன் ரூபாவாக இருந்தது என குறிப்பிடப்பட்டுள்ளது.






# பத்திரிகை சுதந்திரத்தின் காவலர்கள்

**பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனை விலக்குரிமையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினம் இன்றாகும். அதை யொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது**



**பானுஷா நிமல்**
**(யாழ் பல்கலைக்கழகம், ஊடக கற்கைகள் துறை)**

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை , பொதுச் சபைத் தீர்மானம் A/RES/68/163இன் பிரகாரம் நவம்பர் 2 ஆம் திகதியை 'பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனை விலக்குரிமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சர்வதேச தினம்' என்று அறிவித்தது .

இந்த நாளானது பத்திரிகையாளர்கள் மீது இழைக்கப்படும் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறலை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. இந்த நாளில் ஐக்கிய நாடுகள் சபை (யுனெஸ்கோ) போன்ற அமைப்புகள் பத்திரிகையாளர் மீதான வன்முறைகளின் ஆபத்தான விகிதங்களை எடுத்துக்காட்டி பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுக்கின்றன.

பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிப்பதை நிறுத்துவதற்கும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

இது பத்திரிகை சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக மட்டுமன்றி பத்திரிகையாளர்கள் அச்சமின்றி செயல்படக்கூடிய சூழலை உறுதி செய்ய வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறது.

பத்திரிகை என்பது ஜனநாயகத்தின் நான்காவது தூண் எனக் குறிப்பிடப்படுகிறது. உண்மை, நீதி முறை, பொதுநலன் ஆகியவற்றை வெளிப்படுத்தும் ஊடகங்கள் இல்லாமல் ஒரு சுதந்திரமான சமூகம் இருக்க முடியாது. ஆனால் பல நாடுகளில் குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளில் ஊடகவியலாளர்கள் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இவ்வாறான வேளையில் "2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு நான்கு நாள்களுக்கும் ஒரு பத்திரிகையாளர் வீதம் கொல்லப்பட்டார்கள் என்றும் இத்தகைய வழக்குகளில் பெரும்பாலானவை யாராலும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கின்றன என்றும் தன் அறிக்கையில் யுனெஸ்கோ தெரிவித்துள்ளது.

அத்தோடு , கடந்த 7 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பெண் பத்திரிக்கையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், 2006 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட பத்திரிக்கையாளர்கள் கொலைகளில் 85 வீதம் தீர்க்கப்படாதவையாக இருந்தன என்றும், இவ்வெண்ணிக்கை ஆறு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 2000 ஆம் ஆண்டு 89 வீதமாகவும், 12 ஆண்டுகளுக்கு முன்பு 95 வீதமாகவும் இருந்தது என்றும் தெரிவித்துள்ளது அவ்வறிக்கை.

2006 முதல் 2024 வரையான காலப் பகுதிகளில் உலகம் முழுவதும் 1700க்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், பத்தில் 9 கொலை வழக்குகள் நீதித்துறையால் தீர்க்கப்படாமல் இருக்கின்றன என ருநேுளுஊழு முடிளநசளயவழசல ழுக முடைடநன துழரசயெடளைவள கண்காணிப்புப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது. இந்நிலையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என இலங்கையிலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதிலும் 2022-2023 ஆம் ஆண்டுக்கான யுனெஸ்கோ அறிக்கையில் மொத்தம் 162 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர் என்றும் முந்தைய இரண்டு ஆண்டுகளான 2020-2021 உடன் ஒப்பிடுகையில் 38 வீதம் – ஏறக்குறைய பாதி – இறப்புகள் போர் மற்றும் வன்முறை சூழலை அனுபவிக்கும் நாடுகளில் நடந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனுடன் கடத்தல், சித்திரவதை மற்றும் பிற உடல் ரீதியான தாக்குதல்கள் முதல் துன்புறுத்தல் வரை, குறிப்பாக பத்திரிகையாளர்களுக்கு எதிரான வன்முறை மற்றும் தாக்குதல்கள் அச்சுறுத்தல்கள், ஊடக வல்லுநர்களுக்கு அச்சத்தின் சூழலை உருவாக்குகின்றன, இது அனைத்து குடிமக்களுக்கும் தகவல், கருத்துகள் மற்றும் கருத்துக்களை சுதந்திரமாகப் பரப்புவதைத் தடுக்கிறது.

2025 சர்வதேச தினம் (IDEI) உலகளவில் பெண் பத்திரிகையாளர்களுக்கு எதிரான பாலின அடிப்படையிலான வன்முறை

தொடர்ச்சி ▼




# பத்திரிகை சுதந்திரத்தின் காவலர்கள்

தொடர்ச்சி ▲

குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் என்ற கருப்பொருளின் அனுஷ்ப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக டிஜிட்டல் துறையில் பெண் பத்திரிகையாளர்கள் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களையும் கருத்துச் சுதந்திரத்தில் ஏற்படுத்தக்கூடிய அதிர்ச்சியூட்டும் விளைவையும் எடுத்துக்காட்டுகிறது.


டிஜிட்டல் மாற்றம், வெளிப்பாடு மற்றும் செயல்பாட்டிற்கான புதிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ள அதே நேரத்தில் அதிகரித்த அபாயங்களுக்கும் வழிவகுக்கிறது. குறிப்பாக பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள் மற்றும் விஞ்ஞானிகள் போன்ற பொதுவில் பணிபுரியும் பெண்கள் இந்த அபாயங்களால் பாதிக்கப்படுகின்றனர். பாலின ரீதியான தவறான தகவல் பரவுதல், கண்காணிப்பு, டீப்போஃக் மற்றும் பிற வகையான துன்புறுத்தல்கள் உள்ளிட்ட யுஜ-இயக்கப்படும் அச்சுறுத்தல்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர். தொழில்நுட்பத்தால் எளிதாக்கப்பட்ட பாலின அடிப்படையிலான வன்முறை (TFGBV) என்றும் அழைக்கப்படும் இந்த வளர்ந்து வரும் பிரச்சினை குறிப்பாக உருவாக்க செயற்கை நுண்ணறிவின் எழுச்சியுடன் ஆபத்தான அளவில் பரவலாகிவிட்டது.

யுனெஸ்கோவின் விவாதக் கட்டுரையான தி சில்லிங் இதில் பெண் பத்திரிகையாளர்களுக்கு எதிரான ஆன்லைன் வன்முறையில் உலகளாவிய போக்குகளின் கணக்கெடுக்கப்பின் படி பெண் பத்திரிகையாளர்களில் 73 சதவீதம் பேர் தங்கள் பணி தொடர்பாக ஆன்லைனில் அச்சுறுத்தல், மிரட்டல் மற்றும் அவமதிப்புக்கு ஆளானதாகக் கூறியுள்ளனர்.

**இலங்கையில்**

இலங்கையில் பல பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டு கட்டாயமாக காணாமல் போன சம்பவங்களுக்கு ஆளாகியுள்ளனர், பல பத்திரிகையாளர்கள் வெவ்வேறு அரசாங்கங்களின் கீழ் கைது செய்யப்பட்டனர், தடுத்து வைக்கப்பட்டனர், தாக்கப்பட்டனர், அச்சுறுத்தப்பட்டனர், மிரட்டப்பட்டனர் மற்றும் துன்புறுத்தப்பட்டனர். ஊடக நிறுவனங்கள் தீ வைப்பு மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டன. அதிலும் குறிப்பாக 1980களிலிருந்து 2009ஆம் ஆண்டு வரை நடந்த உள்நாட்டு போர் காலம் ஊடகவியலாளர்களுக்கு மிக ஆபத்தான காலமாக இருந்தது.

லஸந்த விக்ரமதுங்க, தாரணி அபயவர்தன, சுப்ரமணியம் சுகிர்த ராஜன், நிமலராஜன், நடேசன் போன்றோர் உண்மையை எழுதுவதற்காக உயிரை விலையாகச் செலுத்தியவர்கள். இவர்களின் போராட்டம் இலங்கை பத்திரிகைத்துறையின் மன உறுதியை புலப்படுத்துகிறது.




இவ்வாறாக் இலங்கை மற்றும் உலகளாவிய ரீதியில் பத்திரிகையாளர் பல சவால்களை எதிர்கொள்கிறார்கள்.

ஐ.நா வின் இத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டதிலிருந்து பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு பிரச்சினை அதிக அளவில் வெளிப்படைத்தன்மையைப் பெற்றுள்ளது. இந்தத் திட்டம் அரசாங்கங்கள் மற்றும் சிவில் சமூகத்தின் சர்வதேச கூட்டணிகளைக் கட்டியெழுப்புவதற்கும் குறைந்தது 50 நாடுகளில் தேசிய பாதுகாப்பு வழிமுறைகளை உருவாக்குவது போன்ற களத்தில் மாற்றங்களைக் கொண்டுவருவதற்கும் பங்களித்துள்ளது. ஆனால் இவ்வாறான சாதனைகள் இருந்தபோதிலும் சவால்களும் உள்ளன. பத்திரிகையாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கும் விகிதம் அதிகமாக உள்ளது மற்றும் புதிய வடிவிலான அச்சுறுத்தல்கள் முன்னோடியில்லாத வகையில் உருவாகின்றன.

ஐ.நா. திட்டத்தை முன்னேற்றுவதற்கான முயற்சிகளை மீண்டும் உறுதிப்படுத்துதல், மறுநிலைப்படுத்துதல் ஆகியவற்றில் 10 ஆண்டு நிறைவு ஒரு மைல்கல்லாக அமைந்தது .

“உண்மையைச் சொல்லும் ஒவ்வொரு குரலும் பாதுகாப்புக் குரியதுபத்திரிகையாளர் ஒருவரின் மரணம் ஒரு நாட்டின் மௌனம் ஆகாது.”

# புதிய கல்வி மறுசீரமைப்பின் ஊடாக ஆசிரியர்கள் வேலைப்பளு குறைப்பு

## கல்வி இராஜாங்க அமைச்சர் மதுர சேனவிரத்ன தெரிவிப்பு



பாடசாலை நேரத்தை 30 நிமிடங்களால் நீடிப்பதன் மூலம், ஆசிரியர்களின் பாடசாலை நேரத்திற்குப் பின்னரான பணிச்சுமை குறையும் என கல்வி இராஜாங்க அமைச்சர் மதுர சேனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ், தொகுதி முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும், இதன் மூலம் ஆசிரியர்களின் வேலைப்பளு பாடசாலை நேரத்திற்குள் மட்டுப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாடசாலை நேரம் 30 நிமிடங்களால் நீடிக்கப்பட்ட பின்னர், ஆசிரியர்களுக்குப் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும் என்றும் அமைச்சர் மதுர சேனவிரத்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கல்வி மறுசீரமைப்பின் மூலம் கல்வித் துறைக்கு மிகவும் பயனுள்ள மாற்றம் நடைபெறுகிறது என தாம் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார்.



# ஓய்வூதியர்களுக்கும் அரச ஊழியர்களுக்கும் வழங்கும் சம்பளங்களால் அரசாங்கத்துக்கு செலவு அதிகரித்தது

மாகாண சபைகள் உட்பட பொதுச் சேவையாளர்களின் சம்பளங்களுக்கான செலவுகள், 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 15.6 சதவீதம் அதிகரித்து, 555.1 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது.

2024ஆம் ஆண்டின் அதே காலப் பகுதியில் இந்தச் செலவு 480.3 பில்லியன் ரூபாவாக இருந்தது.

இந்தச் செலவு அதிகரிப்பிற்கு முக்கியக் காரணம், பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10ஃ2025இன் படி பொதுச் சேவையாளர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்பட்டமையே ஆகும்.

அதேவேளை, ஓய்வூதியச் செலவுகளும் 2025 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 10.8 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் ஓய்வூதியச் செலவு 208.4 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது.

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் இந்தச் செலவு 188.1 பில்லியன் ரூபாவாக இருந்தது.

ஓய்வூதிய கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் ஓய்வூதியதாரர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையே இந்தச் செலவு உயர்வுக்குக் காரணமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லாப்ஸ் எரிவாயு விலையில் நவம்பரில் திருத்தம் இல்லை

லாப்ஸ் எரிவாயுவின் விலையில் திருத்தம் இல்லை என லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் இயக்குநர் நிரோஷன் ஜே. பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நவம்பர் மாதம் முழுவதும் லாப்ஸ் எரிவாயுவின் விலையில் எந்த மாற்றமும் இருக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 12.5 கிலோ எடையுள்ள லாப்ஸ் எரிவாயுவின் விலை 4,115 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.






# தெற்காசிய மெய்வல்லுநர் சாம்பியன்ஷிப் போட்டியில் சாதனை நிகழ்த்திய மிதுன்ராஜை மதிப்பளிக்கும் நிகழ்வு

தெற்காசிய மெய்வல்லுநர் சாம்பியன்ஷிப் போட்டியில் இலங்கை சார்பில் பங்கேற்று பதக்கம் வென்று சாதனை நிகழ்த்தி பெருமை சேர்த்துள்ள வடமராட்சியை சேர்ந்த மிதுன்ராஜின் சாதனையை பாராட்டி மதிப்பளிக்கும் நிகழ்வு பருத்தித்துறையில் மிக சிறப்பான முறையில் இடம்பெற்றுள்ளது.

இந்தியா – ஜார்கண்ட் மாநிலத்தின் தலைநகர் ராஞ்சியில் உள்ள பிர்சா முண்டா கால்பந்தாட்ட விளையாட்டரங்கில் இடம்பெற்ற 4 ஆவது தெற்காசிய மெய்வல்லுநர் சிரேஷ்ட சம்பியன்ஷிப் போட்டி தொடரில் இலங்கை சார்பில் பங்கேற்றிருந்த ஹாட்லி கல்லூரி மாணவனும் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழக வீரருமான சுசீந்திரகுமார் மிதுன்ராஜ் ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் 14.68 மீற்றர் தூரத்தைப் பதிவுசெய்து வெண்கலப் பதக்கத்தை வென்றெடுத்தார்.

வெற்றியுடன் தாயகம் திரும்பியுள்ள மிதுன்ராஜின் சாதனையை பாராட்டி மதிப்பளிக்கும் நிகழ்வு பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை சித்தி விநாயகர் ஆலயத்தில் காலை 10.00 மணியளவில் இறை வழிபாட்டினை தொடர்ந்து சாதனை வீரனுக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து திறந்த வாகனத்தில் மிதுன்ராஜ் ஏற்றப்பட்டு மங்கல வாத்திய மரியாதையுடன் சூரிய மஹால் திருமண மண்டபம் வரை பிரதான வீதியூடாக அழைத்து செல்லப்பட்டு மதிப்பளிப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

வழி நெடுகிலும் வர்த்தகர்கள், பருத்தித்துறை முச்சக்கர வண்டி சேவை சங்கத்தினர், பொது மக்கள் மிதுன்ராஜிற்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தது பாராட்டு தெரிவித்தனர்.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகத்தை சேர்ந்த அரவிந்தன் தலைமையில் சூரியமஹால் மண்டபத்தில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வில் ஹாட்லி கல்லூரி முன்னாள் அதிபர் த.கலைச்செல்வன் மற்றும் ஆசிரியர்கள், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழகத்தினர், பருத்தித்துறை நகரசபை தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள், யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் சார்பில் அதன் தலைவர் கு.மகாலிங்கம் உள்ளிட்டோர் சாதனை வீரன் மிதுன்ராஜிற்கு பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து மதிப்பளித்தனர். மிதுன்ராஜின் பற்றுவிப்பாளர் வ.ஹரிகரன் மற்றும் நா.முகுந்தன் ஆகியோரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில், பருத்தித்துறை பிரதேச செயலாளர் நடராசா திருலிங்கநாதன் பிரதம விருந்தினராகவும் பருத்தித்துறை நகரசபை தவிசாளர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் சிறப்பு விருந்தினர்களாகவும் யோகாசன ஆசான் ம.இரத்தினசோதி மற்றும் பருத்தித்துறை வர்த்தகர் சங்க பொருளார் ஆதித்தன் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் உதவி செயலாளர் மா.முரளி, மாவட்ட, பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்கள், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக வீரர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள், மிதுன்ராஜின் குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள் என பலரும் பங்கேற்றிருந்தனர்.









# பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் 100 கிலோ கஞ்சாவுடன் நால்வர் கைது




பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது, பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் சுமார் 3 கோடி ரூபாவிற்கு அதிக பெறுமதியுடைய 100 கிலோவுக்கு அதிக எடையுடைய கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளதுடன், இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பெண் ஒருவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தெடர்பில் பருத்தித்துறை தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தெரிவிக்கையில்,

“போதை ஒழிப்புக்கான ‘முழு நாடுமே ஒன்றாக’ தேசிய செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் முதலாவது போதைப்பொருள் மீட்பு சம்பவமாக இது பதிவாகியுள்ளது.

சுப்பர்மடம் கடற்பகுதி ஊடாக கேரள கஞ்சா கடத்தல் தொடர்பில் கடற்படையினரால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக பருத்தித்துறை பொலிஸாரால் நேற்று சனிக்கிழமை அதிகாலை சுப்பர்மடம் கடற்கரையில் விசேட சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சட்டவிரோதமாக கடல் வழியாக கொண்டுவரப்பட்ட ஒரு தொகை கேரள கஞ்சா பொதிகள் வாகனம் மூலம் எடுத்துச்செல்லப்பட்டிருந்தன. இருந்த போதிலும் கடத்தலில் ஈடுபட்ட இருவர் படகுடன் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் கடத்தலின் போது துணை புரிந்த மேலும் ஒரு படகு அடையாளம் காணப்பட்டு பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டது. இரண்டு படகு வெளி இணைப்பு இயந்திரங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து பருத்தித்துறை பொலிஸ் விசேட பிரிவின் தகவலுக்கு அமைவாக நடத்திய தேடுதலின் போது பருத்தித்துறை அவ்வொள்ளை பகுதியில் உள்ள வீடென்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இரண்டு பைகளில் காணப்பட்ட 46 கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன. இதன்போது அந்த வீட்டில் இருந்த பெண் ஒருவரும் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நால்வரையும் சான்றுப் பொருள்களையும் பருத்தித்துறை நீதவான் நீதி மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.” – என்றார்.

# சட்டவிரோத மணலுடன் சென்ற வாகனம் கொடிகாமம் பொலிஸாரால் கைப்பற்றல்





யாழ்.தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி வடக்குப் பகுதியில் சட்டவிரோத மணலுடன் பயணித்த பட்டா ரக வாகனத்தை நேற்று கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

வடமராட்சி குடத்தனைப் பகுதியில் பட்டா ரக வாகனமொன்றில் சட்டவிரோதமாக மணல் அகழ்ந்து ஏற்றிய பின்னர் வரணி மாசேரி வீதியால் பயணித்துக் கொண்டிருந்த பட்டா ரக வாகனத்தை மாசேரி பகுதியில் கொடிகாமம் பொலிஸார் இடைமறித்துள்ளனர்.

எனினும் அந்த பட்டாரக வாகனம் பொலிஸாரை மோதும் வகையில் பயணித்து தப்பியோடியுள்ளது.

இந்த நிலையில் பொலிஸார் பட்டாரக வாகனத்தை துரத்திச் சென்று பருத்தித்துறை – கொடிகாமம். வீதியில் கறுக்காய்த்தீவுப் பகுதியில் வைத்து முள்ளுக் கட்டையை வீதியின் குறுக்காக போட்டு தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதன் போது இலக்கத் தகடுகளற்ற கப் ரக வாகனத்தை கைவிட்டு கடத்தல்காரர்கள் 6 பேர் தப்பித்தோடியுள்ளனர். சட்டவிரோதமாக அகழப்பட்ட மணலை இலக்கத் தகடுகளற்ற கப் ரக வாகனத்துடன் கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# அரசியல்வாதிகளின் பாதுகாப்பு நிலைமை தற்பொழுது பாரதூரமானதாக இல்லை

## அமைச்சர் ஆனந்த விஜேபால கூறுகின்றார்



அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது உள்ளூராட்சி சபை தலைவர்களுக்கு நிரந்தரப் பாதுகாப்பு வழங்குமளவுக்கு தற்போதைய பாதுகாப்பு நிலைமை, பாரதூரமானதாக இல்லை என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

வழக்கமான அடிப்படையில் அனைத்து அரசியல் பிரமுகர்களுக்கும் பாதுகாப்பு வழங்கவேண்டிய அளவுக்கு நிலைமை மோசமாக இல்லை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நம்பகமான அச்சுறுத்தல்கள் இருக்குமானால், அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

அச்சுறுத்தல் உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்கனவே பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் விதான ஆகியோருக்கு தற்காலிகப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வரும் அச்சுறுத்தல்கள் அவர்களின் பொதுப் பணிகளிலிருந்து வருகிறதா அல்லது தொடர்பில்லாத சட்டவிரோத நடவடிக்கைகளிலிருந்து வருகிறதா என்பது குறித்து தனக்கு நிச்சயமற்ற நிலை இருப்பதாகவும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சி எம்.பி.க்களின் பாதுகாப்புத் தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து, தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கோ, அரசாங்கத்துக்கோ இல்லை என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவையான பாதுகாப்பை, பொலிஸ் மாஅதிபர், வழங்க வேண்டும் என அந்தக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் மாஅதிபர் என்பவர், அரசமைப்பு பேரவையால் நியமிக்கப்படுகிறார் எனவும் இது ஒரு அரசியல் நியமனம் அல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் தங்கள் தொகுதிகளுக்குச் செல்லும்போது அந்தந்த பொலிஸ் நிலையங்களால் பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

எனினும், எதிர்க்கட்சி எம்.பி.க்களுக்கு அத்தகைய பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே, கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளமையினால், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பாதுகாப்பை வழங்க பொலிஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ரஞ்சித் மத்தும பண்டார வலியுறுத்தியுள்ளார்.

# பிஹார் மக்களின் நிகழ்காலம் பற்றி பா.ஜ.க. தலைவர்கள் பேசுவதில்லை

## பிரியங்கா காந்தி குற்றச்சாட்டு



பா.ஜ.க. தலைவர்கள் கடந்த காலம் குறித்தும் எதிர்காலம் குறித்துமே பேசுகிறார்களே தவிர நிகழ்காலம் பற்றி பேசுவதில்லை என பிரியங்கா காந்தி விமர்சித்துள்ளார்.

பிஹார் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு பெகுசராய் நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரியங்கா காந்தி,

"பிஹாரில் இருந்துதான் மகாத்மா காந்தி பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான தனது போராட்டத்தைத் தொடங்கினார். பிஹார் நிலம் நாட்டுக்கு நிறைய கொடுத்துள்ளது. இந்த நிலம் நாட்டுக்கு சுதந்திரம், முன்னேற்றம், சிறந்த தலைவர்கள், முக்கிய அதிகாரிகள், சிறந்த எழுத்தாளர்கள், கவிஞர்களைக் கொடுத்தது. ஆனால், இன்றைய பிஹாரைப் பார்க்கும்போது, இவ்வளவு பெரிய நிலம் ஏன் வளர்ச்சியடையவில்லை என்ற கேள்வி எழுகிறது.

இங்கு இருப்பது இரட்டை இயந்திர அரசு அல்ல. இது ஒற்றை இயந்திர அரசு. இங்கு நடக்கும் அனைத்தும் மத்திய அரசால் இயக்கப்படுகிறது. முதல்வர் நிதிஷ் குமாரை பா.ஜ.க. மதிப்பதில்லை அவர் கூறுவதை கேட்பதில்லை.

பிஹார் மண்ணில் இருந்து மகாத்மா காந்தி தொடங்கிய போராட்டம் நமது அரசமைப்புக்கானது. அரசமைப்புதான் உங்களுக்கு அதிகாரத்தை அளித்தது, உங்களுக்கு நம்பிக்கையை அளித்தது, வாக்குரிமை எனும் மிகப் பெரிய உரிமையை வழங்கியது. ஆனால், பா.ஜ.கவும் நரேந்திர மோடியும் இந்த உரிமையை பலவீனப்படுத்தவே பாடுபட்டுள்ளனர்.

20 ஆண்டுகளாக பிஹாரில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் உள்ளது. இந்த ஆட்சி உங்கள் உரிமைகளை பலவீனப்படுத்தி உள்ளது. நீங்கள் சமமாக நடத்தப்படவில்லை. உங்களைப் பிரிக்க அரசியல் பயன்படுத்தப்பட்டது. உங்களை திசை திருப்ப பல்வேறு பிரச்சினைகள் எழுப்பப்பட்டன.

சமீபத்தில் பிஹாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் ரத்து செய்யப்பட்டன. இவை வெறும் வாக்குகள் அல்ல உங்கள் உரிமைகள். பா.ஜ.கவும் நரேந்திர மோடியும் வாக்குத் திருட்டை நாட காரணம், மக்கள் விழித்தெழுந்துவிட்டார்கள் என்பதை உணர்ந்து கொண்டதுதான்.

பிஹாரில் ஊழல் பெருகி வருகிறது. எல்லா இடங்களிலும் கொள்ளையடிப்பது பரவலாக நடக்கிறது. தேர்வுத் தாள்கள் கசிகின்றன, லஞ்சம் இல்லாமல் மின் கம்பங்கள் அமைக்கப்படுவதில்லை, லஞ்சம் இல்லாமல் வீதிகள், பாலங்கள் கட்டப்படுவதில்லை. இதுகுறித்தெல்லாம் யாராவது கேள்வி கேட்டால், அவர்கள் அடக்கப்படுகிறார்கள். யாராவது எதிர்ப்பு தெரிவித்தால் அவர்கள் சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.

பா.ஜ.கவும் நரேந்திர மோடியும் கடந்த காலத்தைப் பற்றியும் எதிர்காலத்தைப் பற்றியுமே பேசுகிறார்கள். நிகழ்காலம் பற்றி அவர்கள் பேசுவதில்லை. காங்கிரஸ் நாட்டுக்கு வளர்ச்சியைக் கொண்டு வந்தது. நாட்டில் நிறுவப்பட்ட தொழிற்சாலைகள், ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம், எய்ம்ஸ் ஆகியவை ஜவஹர்லால் நேருவால் உருவாக்கப்பட்டவை. நாங்கள் கடந்த காலத்தைப் பற்றி பேச தொடங்கினால், அவர்கள் வாயடைத்துப் போவார்கள். ஆனால், நாம் கடந்த காலத்தைப் பற்றி அல்ல நிகழ்காலம் குறித்தே பேசுகிறோம்." என்று தெரிவித்தார்.

# சசிகலாவுக்கு பழனிசாமி செய்த துரோக செயல் அவரை வீழ்த்தும்

## தினகரன் தெரிவிப்பு



பழனிசாமி செய்த துரோகமே அவரை வீழ்த்தும் என்று அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டிடிவி. தினகரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் மதுரையில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில்,

"அ.தி.மு.க. மூத்த நிர்வாகியான செங்கோட்டையனை நீக்கபழனிசாமிக்கு தகுதி இல்லை. ஓ.பன்னீர் செல்வம், செங்கோட்டையன், சசிகலா மற்றும் என்னை துரோகிகள் என்று கூறுகிறார் பழனிசாமி. அவரை முதல்வர் பதவியில் அமரவைத்து விட்டு சிறைக்குச் சென்றவர் சசிகலா. அதற்குப் பிறகு என்னநடந்தது? மற்றவர்களை துரோகிகள் என்று சொல்லக்கூட பழனி சாமிக்கு தகுதியில்லை.

பசும்பொன்னுக்கு வந்து சென்ற செங்கோட்டையனை கட்சியில் இருந்து நீக்கியிருப்பதை, தென் தமிழக மக்கள் அவமானமாக கருதுவர். 2021 தேர்தலில் 104 சமுதாயமக்களுக்கு செய்த துரோகத்தால்தான் பழனிசாமி ஆட்சிக்கு வரமுடியாமல் போனது. அதே போல, வரும் தேர்த லிலும் பழனிசாமி தோல்வியை சந்திப்பார். அவரது அழிவை அவரே தேடிக் கொண்டிருக்கிறார். அவரை வீழ்த்த வேறு யாரும் தேவையில்லை, அவர் செய்த துரோகமே அவரை வீழ்த்தி விடும்.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் பழனிசாமியை வீழ்த்திவிட்டு, எம்.ஜி. ஆர். உருவாக்கிய அ.தி.மு.கவை மீண்டும் உருவாக்குவோம். அதற்காக எந்த ஆயுதத்தை எடுக்கப் போகிறோம் என்பதை பொறுத்திருந்து பாருங்கள்." என்று தெரிவித்துள்ளார்.



# கரீபியன் தீவுகளைத் தாக்கியது மெலிசா புயல்: பெரும் பாதிப்பு; ஜமைக்காவில் 19 பேர் பலி

சக்திவாய்ந்த மெலிசா புயல் தாக்கியதில் கரீபியன் தீவுகள் கடுமையான சேதமடைந்துள்ளன.

பசிபிக் பெருங்கடலை சக்தி வாய்ந்த மெலிசா புயல் தாக்கியதில் 10 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

கியூபா, ஹைதி, ஜமைக்கா மற்றும் டொமினிக்கன் குடியரசு உட்பட 13 நாடுகளை உள்ளடக்கிய கரீபியன் தீவை மெலிசா புயல் தாக்கியதில் ஹைட்டியில் 30 பேரும், ஜமைக்காவில் 19 பேரும் உயிரிழந்துள்ளனர்.

புயல் பாதிப்புகளுக்கு இடையே மீட்பு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

மெலிசா புயல் காரணமாக பல பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

ஜமைக்காவில் புயல் பாதிப்பால் கிட்டத்தட்ட 52 டொலர்கள் அளவுக்கு சேதம் ஏற்பட்டு இருப்பதாக அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

மெலிசா புயலானது தற்போது பெர்முடா நோக்கி நகர்ந்து வருவதாக வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.





# ஹமாஸ் ஒப்படைத்த சடலங்கள் பணயக் கைதிகளுடையவை அல்ல

## இஸ்ரேல் குற்றச்சாட்டு



ஹமாஸ் ஒப்படைத்த உடல்கள் பணயக் கைதிகளின் உடல்கள் இல்லை என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஹமாஸ் படையினரால் காசாவிலிருந்து ஒப்படைக்கப்பட்ட 3 உடல்கள் காணாமல் போன 3 இஸ்ரேலிய பணயக் கைதிகளின் உடல்கள் இல்லை என்று இஸ்ரேலிய தரப்பு வழங்கிய தகவல்படி தெரியவந்துள்ளது.

ஹமாஸ் செஞ்சிலுவை சங்கத்தின் உதவியுடன் வெள்ளிக்கிழமை பிற்பகுதியில் இந்த உடல்களை இஸ்ரேலிடம் ஒப்படைத்தனர்.

ஆனால் இதையடுத்து இஸ்ரேலிய இராணுவ வட்டாரங்கள் அசோசியேட்டட் பிரஸிடம் வழங்கிய தகவலில், ஒப்படைக்கப்பட்ட உடல்கள் காசாவில் சிறைப்பிடிக்கப்பட்ட எந்தவொரு நபரின் அடையாளங்களுடன் பொருந்தவில்லை என தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, காசாவில் உள்ள சுகாதார அதிகாரிகளிடம் 30 பாலஸ்தீனியர்களின் உடலங்களை இஸ்ரேல் ஒப்படைத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

செஞ்சிலுவைச் சங்கம் இடைத்தரகராகச் செயல்பட்டு இந்த உடலங்கள் மாற்றப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

# இன்றைய ராசி பலன்கள் - 02.11.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் வெற்றியைக் கொண்டாடி மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் மூலம் பிறரை வெல்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

கடினமான பணிகளையும் எளிதில் முடிப்பீர்கள். பணியில் உங்கள் செயல்திறனுக்கு அங்கீகாரமும் பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். இதனால் இருவருக்கிடையிலான உறவில் நல்ல பிணைப்பு ஏற்படும்.

பணப்புழக்கம் தாராளமாக காணப்படும். உங்கள் வங்கியிருப்பு உயரக் காண்பீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையான மன நிலை கொண்டிருப்பீர்கள். நீங்கள் உறுதியுடன் இருப்பதன் மூலம் இன்றைய நாளின் சவால்களை வெற்றி கொள்ள முடியும்.

இன்று இறுக்கமான பணிகளில் மும்மரமாக இருப்பீர்கள். பணியின்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உறவில் நல்லிணக்கம் பராமரிக்க வாக்கு வாதங்களை தவிர்க்கவும்.அமைதியான சகஜமான அணுகுமுறை மூலம் இனிமையற்ற தருணங்களை தவிர்க்கலாம்.

சிறிது பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகளை தவிர்க்க கட்டுப்பாடுடன் செலவு செய்ய வேண்டும்.

வெந்நீர் குடிப்பதன் மூலம் சளியை தவிர்க்க இயலும்.




இன்று உங்களின் பொறுமை சோதனைக்குள்ளாகும் சூழ்நிலை ஏற்படும். நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். நீங்கள் அமைதியான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய கடினமாக போராட வேண்டும்.

பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும். பணியிடச் சூழலில் காணப்படும் பதட்டமான் நிலைமை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உணரச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்கிடையேயான உறவு பாதிக்கும். நல்ல புரிந்துணர்விற்கு சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பயணத்தின் போது பண இழப்பு காணப்படுகின்றது.




இது உங்களுக்கு சாதகமான நாள். நற்பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் தொடர் முயற்சியால் இது சாத்தியம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இன்றைய நாளை உங்கள் துணையுடன் நெருங்கிப் பழகி கழிப்பீர்கள்.

இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று அதிக பண வரவு காணலாம். அந்தப் பணத்தை நீங்கள் ஆன்மீக நோக்கத்துக்கு பயன்படுத்தலாம்.

இன்று உங்கள் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று பரிசோதனைகுள்ளாகும் நாள். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலை அளிக்கும். ஆன்மீக யாத்திரை உங்களுக்கு பயனளிக்கும்.

பணியிடச் சூழலில் அசௌகரியம் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது கவனமுடன் இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை கெடுக்கும். உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க அமைதியாக நடந்து கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை ஏமாற்றம் அளிக்கும் வகையில் இருக்கும். குடும்பத்திற்காக தேவையற்ற விஷயங்களுக்கு செலவு செய்ய நேரலாம்.

சில அசௌகரியங்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் பாதிக்கப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும். நீங்கள் எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எளிய அணுகுமுறை மேற்கொள்வதன் மூலம் சாதகமான பலன்கள் கிடைக்கும்.

கூடுதல் பொறுப்புகள் காரணமாக பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். விரும்பிய இலக்குகளை அடைவதற்கு திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக கருத்து வேறுபாடு ஏறபட்டு உங்கள் துணையுடன் சூடான விவாதத்தில் கலந்து கொள்வீர்கள்.இத்தகைய போக்கிற்கு இடம் கொடுக்காமல் இருக்க முயலுங்கள்.

உங்கள் குழந்தையின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும்.




உங்கள் முயற்சியில் பொறுமையும் உறுதியும் தேவை. உங்கள் முயற்சில் வெற்றி காண உணர்ச்சி வசப்படாமல் இருக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு நடத்த வேண்டும்.

இன்று கூடுதல் பணிகள் காணப்படும். சக ஊழியர்களின் கடுமையான நிலைப்பாட்டின் காரணமாக நீங்கள் உணர்ச்சிவசப்பட நேரலாம்.

நீங்கள் குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இதனை தவிர்த்து அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணப்புழக்கம் இன்று சுமூகமாக இருக்காது. தேவையற்ற செலவுகள் செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




சுய வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு இன்று சாதகமான நாள். உங்கள் மன உறுதி மூலம் இன்று உங்கள் விருப்பங்களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீங்கள் எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்களுக்கு திருப்திகரமாக இருக்கலாம். குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள். உங்கள் துணையின் விருப்பப்படி நடந்து கொள்ள நேரலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை சிறப்பாக சேமிப்பீர்கள். இதனால் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.11.2025




இன்றைய நிகழ்வுகளில் நீங்கள் நடைமுறை அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுவதை தவிர்க்க வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பாதிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாக இருங்கள்.

பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுங்கள். உங்கள் உணர்வுகளை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்துவதன் மூலம் நல்லுறவு வளரும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.




இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது. உங்கள் முயற்சிகள் வெற்றியை அளிக்காது. நீங்கள் அமைதியாகவும் நட்பான அணுகுமுறையுடனும் இருக்க வேண்டும். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை பெற்றுத் தரும்.

பணியிடச் சூழல் சாதகமான பலன்களை அளிக்காது. பணிச்சுமை அதிகமாக காணப்படும்.

உங்களின் கடுமையான போக்கு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வது கடினம். சகஜமான அணுகுமுறையால் நன்மை விளையும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் செய்ய நேரலாம்.

பதற்றம் காரணமாக கால் வலி மற்றும் முதுகில் விறைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சில வலுவற்ற சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திரங்கள் மூலம் நற்பயன் பெறலாம்.

பணியிடத்தில் நற்பலன்கள் காண உங்கள் பணியில் ஒழுங்கு முறையான அணுகுமுறை வேண்டும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இதனால் சிறிது வருத்தம் உங்களிடம் காணப்படும்.

இன்று பதற்றம் காரணமாகத் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்களை மேம்படுத்திக் கொள்ள இன்றைய நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்களின் இனிமையான தொடர்பின் மூலம் சாதகமான பலன்கள் சாத்தியம். இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

பணியிடத்தில் உங்கள் செயல்திறன் சாதகமான பலன்களை அளிக்கும். பணி சம்பந்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் துணை மகிழ்ச்சியுறுவார். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் அதிக அளவில் காணப்படும். உங்கள் தேவைகள் சமாளிக்க நீங்கள் சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20 பேர் சபாநாயகரிடம் துப்பாக்கி கேட்டனர்



பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காரணமாகத் தங்களுக்கு துப்பாக்கிகளை வழங்குமாறு 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாடாளுமன்ற குழு தலைவர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரிடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளதாகவும் இந்தகோரிக்கைகள் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு குறித்து பொலிஸ் மா அதிபர் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலைத் தொடர்ந்து, சபாநாயகர் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் துப்பாக்கிகளை வழங்குவது ஆராய்வதாகவும் கூறியுள்ளனர்.

இருப்பினும், நாடாளுமன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் துப்பாக்கிகளை வழங்குவது குறித்து முடிவு செய்யப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

தற்போதுள்ள அச்சுறுத்தல்களை பகுப்பாய்வு செய்த பிறகு துப்பாக்கிகளை வழங்குவது குறித்து தீர்மானம் எடுக்க முடியும் என்றும் கூறப்பட்டுள்ளது.